993

நான்காம

சிற
உல

TB
031(4)
N65
86753

சிறுவர் உலகம்

993/4-65

நான்காம் வகுப்பு

A. V. திருமலைசாமி, B.A., L.T.
தலைமையாசிரியர்
பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம்

பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை - 5 :: திருச்சி - 2

முதற் பதிப்பு : 1965

விலை ரூ. 0-50

இப்புத்தகம் 51×76 செ. மீ. 10·9 கி. கி. வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

86753

ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை - 5.

MADRAS RECORD OFFICE
MADRAS

பதிப்புரை

1965-ஆம் ஆண்டு தமிழகக்கல்வித் துறையினர் வெளியிட்ட பாடத் திட்டத்தை ஒட்டி, இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. வினாக்கள், பயிற்சிகள், படங்கள் போன்றவைகள் பெரும்பாலான பாடங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

பாடப் புத்தகத்தைச் சரியான முறையில் பயன்படுத்த மாணவர்களுக்கு இளம் வயதிலேயே பயிற்சி அளிக்க வேண்டியது இன்றியமையாததாகும். எனவே, எளிய நடையில் வேண்டிய அளவில் செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந் நூல் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுமென்று நம்புகின்றோம். இதனைக் கண்ணுறும் கல்வி அதிகாரிகளும் ஆசிரியர்களும் இந்நூலை ஏற்றுப் பாடப் புத்தகமாக வைத்து எமக்கு ஆதரவளிப்பார்கள் என்று நம்புகிறோம்.

வெளியீட்டாளர்.

TB
031(4)
N65

உள்ளுறை

எண்	பொருள்		பக்கம்
1.	சூரியனின் தோற்றமும் மறைவும்	...	1
2.	பூமியின் வடிவம்	...	4
3.	துருவங்கள்—அட்சரேகைகள்	...	6
4.	பகலும் இரவும்	...	9

மாவட்ட நில நூல்

நான்காம் வகுப்பு

நில நூல் : பொது விவரம்

1. சூரியனின் தோற்றமும் மறைவும்

சூரியனையும் சந்திரனையும் நட்சத்திரங்களையும் வானத்தில் காண்கின்றோம். சூரியன் காலையில் தோன்றி மாலையில் மறைவதையும் நாள்தோறும் பார்க்கின்றோம். எனினும், அவற்றை நாம் உற்று நோக்கி, ஏன் அவை குறிப்பிட்டபடி இயங்குகின்றன என்று அறிவதற்கு முயலுவதில்லை. உற்றுநோக்கி, உண்மையை அறிதல் ஒரு நல்ல பயிற்சியாகும்.

கதிரவன் காலையில் எப்பொழுது தோன்றுகிறான், மாலையில் எப்பொழுது மறைகிறான் என்று கவனிக்கலாம். காலையில் தோன்றும் நேரத்தையும் மாலையில் மறையும் நேரத்தையும் குறித்து வைத்துக் கொள்ளலாம். மாதம் முழுவதற்கும் குறிப்பு வைத்துக் கொள்ளலாம். பல மாதங்களுக்கும் அவ்விதம் செய்யலாம். இவ்விதமாகக் குறித்து வைக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து சூரியன் ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில் தோன்றுவதில்லை என்றும், ஒரே நேரத்தில் மறைவதில்லை என்றும் அறியலாம். அதே போல, கோடைக் காலத்தில் பகல் நேரம் அதிகமாகவும், குளிர் காலத்தில் குறைவாகவும் இருப்பதைக் கவனிக்கலாம். வானத்தை உற்று நோக்கும் பொழுது சூரியன்

ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் இல்லாமல் மாறி இருப்பதையும் பார்க்கலாம்.

சென்னையின் பகல் இரவுகளின் நீள அட்டவணை ஒன்று இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து, ஒவ்வொரு ஊரிலும் சூரியன் ஒரே நேரத்தில் உதிப்பதும் மறைவதும் இல்லை என்பதை அறியலாம். பகற் பொழுதின் நேரம் மாறுபடுவதையும் காணலாம்.

மாதம்	தேதி	சூரியன் உதய நேரம் ம. நி.		சூரியன் மறைவு நேரம் ம. நி.		பகற்பொழுதின் நேரம் ம. நி.	
ஜனவரி	21	6	40	6	0	11	20
பிப்ரவரி	20	6	34	6	12	11	38
மார்ச்சு	21	6	16	6	16	12	0
ஏப்ரல்	21	5	57	6	19	12	22
மே	21	5	45	6	25	12	40
ஜூன்	20	5	46	6	34	12	48
ஜூலை	20	5	54	6	36	12	42
ஆகஸ்டு	19	6	0	6	26	12	26
செப்டம்பர்	18	6	0	6	0	12	0
அக்டோபர்	18	6	13	5	45	11	32
நவம்பர்	17	6	12	5	36	11	24
டிசம்பர்	17	6	28	5	42	11	14

மற்றொரு பரிசோதனையையும் நீங்கள் செய்து பார்க்கலாம். உங்களுடைய விளையாட்டு மைதானத்தில் ஒரு செங்குத்தான கோலை ஊன்றுங்கள். காலையில் அதன் நிழல் எத்தனை அடி தூரம் விழுகிறது என்று கவனியுங்கள். காலையில் நிழலின் நீளம் அதிகமாகவும் போகப் போகக் குறைந்து கொண்டு வருவதையும், நண்பகலில் நிழலே



கோலின் நிழல்

விழாமல் இருப்பதையும் பார்க்கலாம். இதேபோல, பிற்பகல் நேரம் ஆக ஆக நிழல் நீண்டு கொண்டு செல்வதையும் பார்க்கலாம். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நிழலின் நீளத்தைக் குறித்துக்கொண்டு, நீளத்தைப் பல பாகங்களாகப் பிரித்துத் தரையில்

அடையாளமிட்டு நேரத்தைக் கூறலாம். நம் முன்னோர்கள், வானத்தை நோக்கியும் வீடுகளில் திறந்த வெளிகளில் நிழலின் சாய்வைக் கொண்டும் நேரத்தைக் கூறுவதுண்டு.

வினாக்கள்

1. உற்று நோக்குதலின் அவசியமென்ன ?
2. சூரியன் ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில் தோன்றுவதில்லை, மறைவதில்லை என்பதை எவ்விதம் அறிவாய் ?
3. ஒரு செங்குத்தான கோலின் நிழலைக் கொண்டு என்ன அறிகிறாய் ?

செய்முறைப் பயிற்சி

உங்கள் வகுப்பில், சூரியன் உதிக்கும் நேரம், மறையும் நேரம் ஆகியவற்றைக் குறித்து அட்டவணை ஒன்று தயார் செய்யவும்.

2. பூமியின் வடிவம்

நாம் வாழும் பூமி பார்ப்பதற்குத் தட்டை வடிவமாகத் தோன்றினாலும் உண்மையில் அது ஒரு கோளம் அல்லது உருண்டை வடிவமாகவே அமைந்துள்ளது. ஆனால், வடக்கிலும் தெற்கிலும் ஓர் ஆரஞ்சுப் பழத்தைப்போலச் சற்று தட்டையாக உள்ளது. பூமி உருண்டை வடிவமானது என்பதைப் பல வழிகளில் தெரிந்துகொள்ளலாம்.

கடற்கரையில் நின்றுகொண்டு கரையை நோக்கிவரும் கப்பலைப் பார்த்தால் முதலில் அதன்

புகைப் போக்கியும், பிறகு அதன் மேல் தட்டு, நடுப்பாகம், அடிப்பகுதி ஆகியவையும் படிப்படியாகத் தெரியவரும். பூமி தட்டையாக இருந்தால் கப்பல் முழுவதுமே முதலில் தெரிந்துவிடுமல்லவா?

கப்பல் மூலமாகவும் ஆகாயவிமான மூலமாகவும் ஒரே திசை நோக்கிச் சென்று, மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே வந்துவிட முடிகிறது என்பதை நாம்



கப்பல் வரும் தோற்றம்

அறிகிறோம். இதனால், பூமி உருண்டை வடிவமாக இருத்தல் வேண்டுமென்று தெரிகிறது அல்லவா?

சந்திர கிரகணத்தின் பொழுது சந்திரன் மீது பூமியின் நிழல் விழுகின்றது. அந்த நிழலின்

வடிவம் வட்டமாகக் காணப்படுகிறது. உருண்டை வடிவமான பூமியின் நிழல்தான் வட்டமாக உள்ளது என நாம் அறிவோம்.

ஒரு சம நிலத்திலிருந்து பூமியைப் பார்த்தால் ஒரு சிறு பகுதியே தெரிகிறது. மேட்டின் மீது ஏறி நின்று பார்ப்போமானுல் அதிகப் பகுதியைப் பார்க்க முடிகிறது. ஒரு விமானத்தில் உயரச் சென்று பார்ப்போமேயானுல் இன்னும் அதிகப் பகுதி தெரியவரும். பூமி உருண்டை வடிவமாக இருப்பதால்தான் இவ்விதம் தோன்றும்.

வானத்தில் சூரியன், சந்திரன் உருண்டை வடிவமாகத் தோன்றுவதுபோல, பூமியும் வானத்தில் சஞ்சரிக்கும் ஒரு கோளமேயாகும்.

சமீப காலத்தில் வானவெளியில் சென்ற ருஷ்ய-அமெரிக்க வானவெளிவீரர்கள் உலகம் உருண்டை வடிவமாக இருப்பதைப் பார்த்ததாகச் சொல்லுகிருர்கள்.

3. துருவங்கள்—அட்சரேகைகள்

நீங்கள் உங்கள் வகுப்பில் பூகோள உருண்டையைப் பார்த்திருப்பீர்கள். அது ஓர் அச்சின் மீது சுழலும்படி செய்யப்பட்டிருக்கிறது. வடக்கில் உள்ள அச்சின் முனையை வடதுருவம் என்றும், தெற்கிலுள்ள முனையைத் தென்துருவம் என்றும் கூறுகிறேம். இவ்வித அச்சு பூமியில் உண்மையில் இல்லை என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

வடதுருவத்திற்கும் தென் துருவத்திற்கும் நடுவில், பூமியைச் சுற்றிலும் கிழக்கு மேற்காக ஒரு கோடு வரைந்தால் அது பூமத்திய ரேகை ஆகும். பூமத்திய ரேகை பூமியை வடகோளார்த்தம், தென்

கோளம்

கோளார்த்தம் என இரு சம பாகங்களாகப் பிரிப்பதைக் கவனியுங்கள். பூமியைச்சுற்றி இவ்விதக் கோடு உண்மையில் இல்லை. எனவே, பூமத்திய ரேகை ஒரு பாவனைக் கோடு ஆகும்.

பூமத்திய ரேகைக்கு வடக்கிலும் தெற்கிலும் சமதூரத்தில் கிழக்கு மேற்காக அநேக கோடுகள் வரையப்பட்டுள்ளதைக் கோள உருண்டையில் கவனியுங்கள். இக்கோடுகள் அட்சரேகைகள் எனப்படும். பூமத்தியரேகையை 0 டிகிரியாகவும் அதிலிருந்து வடதுருவம்வரை 90 டிகிரிகளாகவும், தென் துருவம் வரை 90 டிகிரிகளாகவும் பிரித்துச்



அட்சரேகையும்
தீர்க்கரேகையும்



சமதூரக் கோடுகள் இருப்பதைப் பாருங்கள். அட்ச ரேகைகளும் பாவனைக் கோடுகளே யாகும். பூமியின் மேற்பரப்பிலுள்ள ஓர் இடத்தைக் குறிப்பிட வேண்டுமானால், அந்த இடம் பூமத்தியரேகைக்கு வடக்கில் அல்லது தெற்கில் எந்த அட்சத்தில் இருக்கிறதென்று கூறவேண்டும். பூமத்திய ரேகையிலிருந்து $23\frac{1}{2}^\circ$ வடக்கேயுள்ள அட்சரேகை கடகரேகை என்றும், $23\frac{1}{2}^\circ$ தெற்கேயுள்ள அட்ச ரேகை மகரரேகை என்றும் அழைக்கப்படுகின்றன.

4. பகலும் இரவும்

பூமி தன்னைத்தானே சுற்றுதல் : சூரியன் கிழக்கில் தோன்றுகிறது, மேற்கில் மறைகிறது என்று நாம் சொல்லுகிறோம். இது உண்மைதானா? புகை வண்டி வேகமாக ஓடும் பொழுது, அவ்வண்டி யில் சன்னலருகில் உட்கார்ந்து இருப்பவர்களுக்கு மரம், செடிகளெல்லாம் ஓடுவதாகத் தோன்றுகிறது. உண்மையில் அவை ஓடவில்லை. நாம் செல்லும் புகை வண்டிதான் ஓடுகிறது. அதேபோன்று, சூரியன் நிலையாகவும், பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டும் இருக்கிறதென்பதை நாம் அறிய வேண்டும். சூரியன் சுற்றுவது போலத் தோன்று வது ஒரு போலித் தோற்றமேயாகும்.

சூரியன் மறைந்துவிட்டால் இருட்டாகிவிடுகிற தல்லவா ? இதிலிருந்து பூமிக்குச் சொந்த வெளிச்சம் இல்லையென்று புலனாகும். சூரிய

வெளிச்சம் பூமியில் விழுவதால்தான் பூமி பகலில் வெளிச்சமாக இருக்கிறது. சூரியன் தெரியா விட்டால் இருட்டாக இருக்கும். சூரியன் தெரியும் காலம் பகல்; தெரியாத காலம் இரவு.

இரவு பகல் எப்படி உண்டாகிறது என்பதை இனிப் பார்ப்போம். கோளத்தின் எதிராக ஒரு



பகல், இரவு பற்றிய சோதனை

விளக்கை ஏற்றிவைத்துப் பார். கோளத்தின் ஒரு பகுதி வெளிச்சமாகவும் மற்ரெரு பகுதி இருட்டாகவும் இருப்பதைப் பார்க்கிரேம். கோளத்தைச் சுற்றும் பொழுது வெளிச்சமான பகுதி இருட்டிலும், இருட்டான பகுதி வெளிச்சத்திலும் மாறி மாறி வருவதைப் பார்க்கிரேம். சூரியன் நிலையாக இருக்க, பூமி தன்னைத் தானே சுற்றும் பொழுது

வெளிச்சமான பகுதி இருட்டிலும் இருட்டான பகுதி வெளிச்சத்திலும் மாறி மாறி வரும். இரவும் பகலும் இவ்விதம் மாறி மாறி ஏற்பட்டுக்கொண்டே வருகின்றன. இதனுல், பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வதால் இரவும் பகலும் ஏற்படுகின்றன வென்று அறிகிருேம். பூமி தன்னைத் தானே ஒரு தடவை சுற்றுவதற்கு 24 மணி நேரம் அல்லது ஒரு நாள் ஆகிறது.

எக்காலத்திலும் பகல் 12 மணிநேரம், இரவு 12 மணி நேரம் என்று திட்டமாகச் சொல்ல முடியாது. கோடைக்காலத்தில் சூரியன் அதி சீக்கிரத்தில் தோன்றி, மாலையில் அதிக நேரம் கழித்து மறை கின்றது. அக்காலத்தில் பகல்நேரம் அதிகம்; இரவு நேரம் குறைவு. ஏப்ரல், மே, ஜூன், ஜுலை, ஆகஸ்டு மாதங்களில் பகல் நேரம் அதிகமாக உள்ளது. அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் சூரியன் நேரங்கழித்துத் தோன்றி, மாலையில் சீக்கிரமாக மறைகின்றது. இக்காலத்தில் பகற்காலம் குறைவாகவும், இராக் காலம் அதிகமாகவும் உள்ளது. மார்ச்சு மாதம் 21-ஆம் தேதியன்றும் செப்டம்பர் 22-ஆம் தேதி யன்றும் பகற்பொழுதும் இராப்பொழுதும் சமமாக இருக்கும்.

விஞக்கள்

1. பூமி, உருண்டை வடிவமானது என்று எவ்வாறு அறி கிருேம்? இரண்டு உதாரணங்களால் விளக்குக.

2. அட்சரேகை என்ருல் என்ன?

3. சூரியன் நிலையாயிருக்க, பூமிதான் சுற்றிவருகிற தென்று எவ்வாறு கூறுவாய் ?

4. பகல், இரவு எவ்வாறு ஏற்படுகின்றன ?

5. பகல்நேர அளவும் இரவுநேர அளவும் வேறுபடக் காரணமென்ன ?

செய்முறைப் பயிற்சி

1. ஒரு கோளம் வரைந்து, அதில் முக்கியமான அட்ச ரேகைகளைக் குறிப்பிடுக.

2. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் பற்றி அதிக விவரங்கள் ஆசிரியரைக் கேட்டுத் தெரிந்து கொள்க.

நான்காம் வகுப்பு

செங்கற்பட்டு மாவட்டம்

நில நூல்

1. இருப்பிடம்

நாம் வசிக்கும் மாவட்டமாகிய செங்கற்பட்டு மாவட்டம், நமது இராச்சியத்தின் வடக்குக் கோடியில், கிழக்குக் கரையில் அமைந்துள்ளது. இதன் வடக்கில் ஆந்திர மாநிலத்தின் நெல்லூர் மாவட்டமும், தெற்கில் தென் ஆற்காடு மாவட்டமும், மேற்கில் வட ஆற்காடு, சித்தூர் ஆகிய மாவட்டங்களும், கிழக்கில் வங்காள விரிகுடாவும் எல்லைகளாக உள்ளன. நமது மாவட்டம் வடக்கு, தெற்காகப் பரவியுள்ளது. இதன் பரப்பு சுமார் 3188 சதுர மைல்களாகும். இம்மாவட்டத்தின் கடற்கரை 115 மைல்கள் நீளமுள்ளது.

ஆட்சி முறைக்காக நமது மாவட்டம் பல தாலூகாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை யாவன: பொன்னேரி, செங்கற்பட்டு, திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர், மதுராந்தகம், சைதாப்பேட்டை.

வினாக்கள்

1. நமது மாவட்டத்தின் எல்லைகளைக் குறிப்பிடுக.
2. நமது மாவட்டத்தின் தாலூகாக்கள் எவை?
3. நமது மாவட்டத்தின் பரப்பளவு எவ்வளவு ?

தாலுகாக்களும் தலைநகர்களும்



2. இயற்கை அமைப்பும் ஆறுகளும்

எல்லா இடங்களிலும் நிலம் ஒரே வகையாக இருப்பதில்லை. சில இடங்கள் பள்ளமாகவும் சில இடங்கள் மேடாகவும் உள்ளன. சில இடங்களில் மலைகளும் குன்றுகளும் இருக்கின்றன. இவை எல்லாம் இயற்கையாகவே ஏற்பட்டவை. ஆகையால், இவற்றை இயற்கை அமைப்பு என்று பொதுவாகக் கூறுகின்றோம்.

இனி, நமது மாவட்டத்தின் இயற்கை அமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் கவனிப்போம்.

நமது மாவட்டம் பெரும்பாலும் சமவெளியே. பொன்னேரித் தாலூகாவின் மேற்குப் பகுதியில் காம்பாக்கம் குன்றுகளும், நாகலாபுரம் குன்றுகளும் உள்ளன. காம்பாக்கம் குன்றுகள் சுமார் 2500 அடி உயரம் உள்ளன. இவையே நமது மாவட்டத்தில் மிக உயரமான குன்றுகள். இவற்றைத் தவிர, ஆங்காங்குச் சில குன்றுகளும் உள்ளன. இவற்றுள் முக்கியமானவை சைதாப்பேட்டைத் தாலூகாவில் உள்ள கிண்டிக் குன்று, பல்லாவரம் குன்று, பரங்கிமலை, திருநீர்மலை ஆகியவையும், செங்கற்பட்டு தாலூகாவில் உள்ள சிங்கப் பெருமாள் கோயில்மலை, திருப்போரூர் மலை, திருக்கழுக்குன்றம் மலை ஆகியவையும், காஞ்சிபுரம் தாலூகாவில் உள்ள பழையசீவரம் மலையும் ஆகும்.

ஆறுகளும் ஏரிகளும் : நமது மாவட்டம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சரிந்திருப்பதால், இங்கு

மலைகளும் ஆறுகளும்



நாகலாபுரம்
மலை
ஆந்திரப் பிரதேசம்
பழவேற்காடு
ஏரி
ஆரண்ய நதி
செந்தலை ஆறு
புழலேரி
அடையாறு
செம்பரம்பாக்கம்
ஏரி
வங்காள விரிகுடா
வேகவதி ஆறு
செய்யாறு
திருக்கழுக்குன்றம்
மலை
பாலாறு
வட ஆற்காடு ஜில்லா
மதுராந்தகம் ஏரி

பாயும் ஆறுகள் எல்லாம் கிழக்கு நோக்கியே ஓடி, வங்காள விரிகுடாவில் கலக்கின்றன. இவற்றுள் முக்கியமானவை ஆரணியாறு, குசத்தலையாறு, கூவம் நதி, அடையாறு, பாலாறு ஆகியவை.

ஆரணியாறு: சித்தூர் மாவட்டத்தில் உற்பத்தியாகி, பொன்னேரி, திருவள்ளூர் ஆகிய தாலூகாக்களின் எல்லையாகப் பாய்ந்து, பிறகு பொன்னேரி தாலூகாவின் வழியே சென்று, பழவேற்காட்டு ஏரியில் கலக்கின்றது.

குசத்தலையாறும் சித்தூர் மாவட்டத்திலேயே உற்பத்தியாகின்றது. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள காவேரிப்பாக்கம் ஏரியின் தண்ணீரும் இதில் கலக்கின்றது. நமது மாவட்டத்தில் இது திருவள்ளூர், பொன்னேரி ஆகிய தாலூகாக்கள் வழியே பாய்ந்து, வங்காள விரிகுடாவில் கலக்கின்றது. இதன் தண்ணீரின் ஒரு பகுதியைச் சோழவரம் ஏரி, புழலேரி ஆகியவற்றில் தேக்கி, சென்னை நகருக்குக் குடிதண்ணீர் வசதி அளிக்கிறார்கள்.

கூவம் நதி, காஞ்சிபுரம் தாலூகாவில் கூவம் ஏரியில் உற்பத்தியாகி, சென்னை நகருக்குள் பிரவேசித்து, கடலில் கலக்கின்றது.

அடையாறு: இது ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவிலுள்ள செம்பரம்பாக்கம் ஏரியில் உற்பத்தியாகி, சென்னை நகரின் தென்கோடி வழியே பாய்ந்து, கடலில் கலக்கின்றது

பாலாறு: இதுவே நமது மாவட்டத்திலுள்ள பெரிய ஆறு. இது மைசூர்ப் பீடபூமியில் உற்பத்தி

யாகி, வட ஆற்காடு வழியே பாய்ந்து, பிறகு காஞ்சிபுரம் தாலூகாவில் நமது மாவட்டத்திற்குள் பிரவேசித்து, செங்கற்பட்டு, மதுராந்தகம் ஆகிய தாலூகாக்களின் எல்லையாகப் பாய்ந்து, கடலில் கலக்கின்றது. காஞ்சிபுரம் தாலூகாவில் செய்யாறு, வேகவதி என்ற இரண்டு துணையாறுகள் பாலாறுடன் கலக்கின்றன. இம்மூன்று ஆறுகளும் கூடுமிடத்திற்குத் திருமுக்கூடல் என்று பெயர்.

வினாக்கள்

1. இயற்கை அமைப்பு என்று எதைக் கூறுகின்றோம் ?
2. நமது மாவட்டத்திலுள்ள உயரமான குன்றுகள் எவை ?
3. நமது மாவட்டத்தில் பாயும் ஆறுகள் எவை ?

3. தட்ப வெப்ப நிலை

நமது மாவட்டம், பொதுவாக, வெப்பமாக உள்ளது. சராசரி வெப்ப நிலை 82 டிகிரி பாரன்ஹீட் ஆகும். ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரை இங்குக் கோடைப் பருவம். கடற்கரைப் பகுதிகளில் கடற்காற்றால் வெப்பம் குறைவாக இருக்கும். நமது மாவட்டத்தில் ஆண்டிற்குச் சராசரி, கடற்கரைப் பகுதிகளில் 50 அங்குலமும் உள்நாட்டில் 45 அங்குலமும் மழை பெய்கிறது.

உள்நாட்டுப் பகுதிகளைவிடக் கடற்கரைப் பகுதிகளில் நல்ல மழை பெய்கிறது. பருவ மழைக்கு முன்பு பெய்யும் மழை அநேகமாக மாவட்டம் முழுவதும் சீராகப் பெய்கிறது. தென் மேற்குப் பருவமழை வடக்குப் பகுதியைக் காட்டிலும் தெற்கில்

அதிகமாகப் பெய்கிறது. வடகிழக்குப் பருவமழை உள்நாட்டுப் பகுதிகளைவிடக் கடற்கரையை அடுத்துள்ள பகுதிகளில் அதிகமாகப் பெய்கிறது. பெரும்பாலான மழை, அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை வடகிழக்குப் பருவக் காற்றால் பெய்கிறது. இம் மாவட்டம் பருவமழையை நம்பியிருப்பதால், மழை தவறினால் சிரமம் ஏற்படுகிறது.

வினாக்கள்

1. நமது மாவட்டத்தில் தட்ப வெப்ப நிலை எவ்வாறு அமைந்துள்ளது?
2. நமது மாவட்டத்தில் பெய்யும் சராசரி மழை அளவு எவ்வளவு?
3. எந்தெந்தப் பருவக்காற்றுகளால் நம் மாவட்டத்திற்கு மழை கிடைக்கிறது?

4. தொழில்கள்

விவசாயம் :

நமது மாவட்டத்தில் வேளாண்மையே முக்கியத் தொழிலாக அமைந்துள்ளது. சுமார் 85 சதவீதம் மக்கள் உழுதுண்டு வாழ்கிறார்கள். பருவமழை தவறிப்போகும் காலங்களில் விளைச்சல் குறைகிறது. நம் மாவட்டத்தில் குளத்துப் பாசனம் முக்கியமானதாய் இருக்கிறது. வேளாண்மைப் பம்பு செட்டுகளும் பாசனத்திற்கு உதவுகின்றன. வேளாண்மை செழிப்புறுவதற்கு மாவட்டத்தில் பல வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. உயர்தர வித்துகளை உற்பத்தி செய்தல், இரசாயன, தழை உரங்களைப் பயன்படுத்துதல், முன்னேற்றச் சாகுபடி

முறைகள், மண்வளப் பாதுகாப்பு, நில அபிவிருத்தி முதலியவற்றின் மூலமாக இம்மாவட்டத்தின் உற்பத்தி அளவு உயர்ந்திருக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் அரிசி உற்பத்தி ஒன்றரை மடங்கு உயர்ந்துள்ளது. நிலக்கடலை உற்பத்தி ஏறக்குறைய இரு மடங்கு அதிகமாகியிருக்கிறது. சிறு காவேரிப்பாக்கம், கொழுந்தலூர், ஊத்துக்கோட்டை ஆகிய இடங்களில் அரசாங்க விதைப் பண்ணைகள் உள்ளன. திரூரில் அரிசி ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம், மதுராந்தகம் ஆகிய தாலூகாக்களில் அதிக அளவிலும், மற்றத் தாலூகாக்களில் நீர் வசதி உள்ள இடங்களில் ஓரளவும் நெல் பயிராகின்றது. மேலும், அவ்விடங்களில் கரும்பு, வெற்றிலை, வாழை முதலியனவும் பயிராகின்றன.

நீர் வசதி சற்றுக் குறைவான இடங்களில் புன்செய்த் தானியங்களாகிய கம்பு, சோளம், கேழ்வரகு, ஆகியவையும், நிலக்கடலை, எள், கொள் முதலியவையும் பயிராகின்றன. சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமாகக் காய்கறிகள் பயிராக்கப்படுகின்றன.

வினாக்கள்

1. நமது மாவட்டத்தின் முக்கிய தொழில் யாது?
2. நமது மாவட்டத்திலுள்ள பாசனத்திற்கு பெரிதும் உதவும் வசதிகள் யாவை?
3. வேளாண்மை செழிப்புறுவதற்கு எவ்வித வளர்ச்சித் திட்டங்கள் நமது மாவட்டத்தில் நிறைவேற்றப் பட்டன?

4. நமது மாவட்டத்தில் கடந்த பத்தாண்டுகளில் அரிசி உற்பத்தி எம்மடங்கு அபிவிருத்தி அடைந்துள்ளது ?
5. விதைப் பண்ணைகள் நமது மாவட்டத்தில் எங்கு உள்ளன ?
6. நமது மாவட்டத்தில் எந்தெந்தத் தாலூகாக்களில் அதிக அளவு நெல் பயிராகின்றது ?

5. கால்நடை அபிவிருத்தி

கால்நடைச் செல்வம் வளமுற்று விளங்கினுல் தான் வேளாண்மை சிறப்படையும். நிலத்தில் உழைக்க வலிமை மிக்க காளைகள் வேண்டும். கிராமப் பொருளாதாரத்திற்கு வலிமையுள்ள விலங்குகள் பெரிதும் உதவக்கூடியவை.

கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கம் விலங்குச் செல்வத்தைப் பேணுவதும், சத்துள்ள பால், முட்டை முதலியவற்றை நல்ல தரத்தில் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதும் ஆகும். கால்நடைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் கம்பளி, தோல், கொம்புகள் முதலியன பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுகின்றன. எனவே, வேளாண்மைக்கும் அதோடு தொடர்புடைய கால்நடை அபிவிருத்திக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

நமது மாவட்டத்தில் சிந்தி, முர்ரா போன்ற உயர்ந்த இனப் பொலிகாளைக்ளைக்கொண்டு, உள்நாட்டுக் கால்நடைகளின் தரம் உயர்த்தப்படுகின்றது. செங்கற்பட்டு, திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களில் கால்நடை அபிவிருத்தி நிலையங்கள் உள்ளன. மதுராந்தகம், சுங்குவார் சத்திரம், சால

வாக்கம், அச்சிறுபாக்கம், சூணம்பேடு ஆகிய இடங்களில் கால்நடை துணைவிஸ்தரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. கால்நடைகளைப் பீடிக்கும் நோய்களை ஆராய்ந்து, அவற்றைத் தீர்க்க வழி வகை காணும் நோக்கத்துடன், காஞ்சிபுரம் விலங்கு மருத்துவ மனையில் ஓர் ஆய்வுக்கூடம் அமைக்கப் பட்டுள்ளது.

சென்னையிலிருந்து ஏழு மைல் தொலைவிலுள்ள மாதவரம் என்னுமிடத்தில் ஒரு பெரிய பால் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. மாதவரம் பால் விநியோகத் திட்டத்தின் கீழ் 14 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நமது மாவட்டத்தில் நெல்லூர் வகை ஆடுகளின் அபிவிருத்திக்காக, காட்டுப்பாக்கத்தில் ஓர் ஆட்டுப்பண்ணை நிறுவப்பட்டுள்ளது. இப்பண்ணையோடு ஒரு கோழி வளர்ப்பு விஸ்தரிப்பு நிலையமும் இணைக்கப்பட்டுள்ளது. அல்லாமலும், யார்க்ஷயர் பன்றிகளை வளர்க்கும் வேலையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம், கலியாம் பூண்டி ஆகிய இடங்களில் கோழி வளர்ப்புச் செயல் முறைக் காட்சி நிலையங்கள் உள்ளன.

வினாக்கள்

1. கால்நடை அபிவிருத்தித்திட்டத்தின் நோக்கமென்ன?
2. நமது மாவட்டத்தில் கால்நடை அபிவிருத்தி நிலையங்களும், துணை விஸ்தரிப்பு நிலையங்களும் எங்கெங்கு உள்ளன?
3. நமது மாவட்டத்தில் எங்குப் பெரிய பால் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது?
4. நமது மாவட்டத்தில் ஆட்டுப் பண்ணை எங்குள்ளது? அதோடு இணைந்த பண்ணைகள் யாவை?

031(47)
N65

6. முக்கிய கைத்தொழில்கள்

பயிர்த்தொழிலுக்கு அடுத்தபடியாக நடைபெறுவது நெசவுத் தொழிலாகும். காஞ்சிபுரத்தில் ஏராளமான கைத்தறிகள் உள்ளன. அங்கு லுங்கிகள், வேட்டிகள், விலையுயர்ந்த பட்டு, சரிகைச் சேலைகள் நெசவு செய்யப்படுகின்றன. சைதாப்பேட்டைத் தாலூகாவிலும், பொன்னேரித் தாலூகாவிலும் சில இடங்களில் நெசவுத் தொழில் நடைபெறுகின்றது. நெசவுத் தொழிலையொட்டி ஆங்காங்கு துணிகளுக்குச் சாயங்கள் போடும் தொழிலும் நடைபெறுகின்றது.

8753

சைதாப்பேட்டைத் தாலூகாவில் பல இடங்களில் தோல் பதனிடும் தொழில் நடைபெறுகின்றது. குரோம்பேட்டை என்னுமிடத்தில் தோலை உயர்ந்த வகையில் பதனிட்டு, பல பொருள்களைச் செய்வதற்காக ஒரு பெரிய தொழிற்சாலை உள்ளது. நமது மாவட்டத்தில் பல இடங்களில், செம்பு, பித்தளை, வெண்கலம் ஆகியவற்றைக் கொண்டு, பாத்திரங்கள் செய்யும் வேலை நடைபெறுகின்றது.

இவற்றைத் தவிர, நூற்றுக்கணக்கானவர்கள் வேலை செய்யும் பல தொழிற்சாலைகளும் நமது மாவட்டத்தில் உள்ளன. பெரம்பூர் இரயில்வே தொழிற்சாலையும் இரயில் பெட்டிகள் செய்யும் தொழிற்சாலைகளும் உள்ளன. எண்ணூர், வண்டலூர் ஆகிய இடங்களில் மோட்டார் தொழிற்சாலைகளும், அம்பத்தூரில் சைக்கிள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் உள்ளன. திருவொற்றியூரில் தீப்பெட்டிகள் செய்வதற்காக ஒரு பெரிய தொழிற்சாலை

உள்ளது. கிண்டியில் பவுண்டன் பேனுக்கள் செய்யும் தொழிற்சாலேயும், தடுப்பு மருந்துகள் தயார் செய்யும் நிலேயமும் இருக்கின்றன. திருவள்ளூர் அருகில் மண் குழாய்கள் செய்யும் தொழில் நடைபெறுகின்றது. மதுராந்தகம் தாலூகா படாளம் கிராமத்தில் சர்க்கரை ஆலே அமைந்துள்ளது.

மேற்கண்ட தொழில்களல்லாமல் சிறு தொழில்கள் அநேக இடங்களில் நடைபெற்றுவருகின்றன. கும்மிடியாண்டித்தோப்பில் பாய் நெசவு நடைபெறுகிறது. பழவேற்காட்டில் பனேயோலேப் பொருள்கள் தயார் செய்கிருர்கள். சதுரங்கப் பட்டினத்தில் கயிறு செய்யும் தொழில் நடக்கின்றது. ஸ்ரீபெரும்புதூரில் மறை ஆணிகளும் திருகு வில்லேகளும் செய்யப்படுகின்றன.

கோவளம், சூணும்பேடு, செய்யூர் ஆகிய இடங்களில் உப்பளங்கள் உள்ளன.

வினுக்கள்

1. நமது மாவட்டத்தில் நெசவுத் தொழில் எங்கெங்கு நடைபெறுகிறது ?
2. இரயில் பெட்டிகள் செய்யும் தொழிற்சாலே நம் மாவட்டத்தில் எங்கு உள்ளது ?
3. மோட்டார் தொழிற்சாலேகள் நம் மாவட்டத்தில் எவ்வூர்களில் அமைந்துள்ளன ?
4. பாய் செய்தல், பனேயோலேத்தொழில், கயிறு செய்தல் ஆகியன நம் மாவட்டத்தில் எங்கெங்கு நடைபெறுகின்றன ?

7. போக்கு வரவு வழிகள்

மக்கள் பல்வேறு காரியங்களுக்காக, ஓரிடத்தி லிருந்து மற்ருேர் இடத்திற்குப் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது; பொருள்களையும் அனுப்ப வேண்டியிருக்கிறது. இவற்றிற்காகப் போக்குவரவு வழிகளும் சாதனங்களும் பயன்படுகின்றன.

போக்குவரவு வழிகளைச் சாலைகள், இருப்புப் பாதைகள், நீர்ப்பாதைகள், ஆகாய விமானப் பாதைகள் எனப் பிரிக்கலாம்.

சாலைகள்: நமது மாவட்டத்தில் 2077 மைல் நீளம் சாலைகள் உள்ளன. சென்னை நகரிலிருந்து வடக்கு, மேற்கு, தெற்குத் திசைகளில் செல்லும் சிறந்த நெடுஞ்சாலைகள், நமது மாவட்டத்தின் வழியே செல்லுகின்றன. வடக்கு நோக்கிச் செல்லும் சாலை சைதாப்பேட்டை, பொன்னேரித் தாலூகாக்கள் வழியே சென்று, நெல்லூர் மாவட்டத் திற்குள் நுழைகிறது. மேற்கே செல்லும் சாலை பூவிருந்தவல்லி, ஸ்ரீபெரும்புதூர் ஆகியவற்றின் வழியே காஞ்சிபுரத்துக்கு அருகாமையிற் சென்று, வட ஆற்காடு மாவட்டத்தை அடைகின்றது. தெற்கு நோக்கிச் செல்லும் சாலை சைதாப்பேட்டை, பல்லாவரம், செங்கற்பட்டு, மதுராந்தகம் ஆகிய வற்றின் வழியே தென் ஆற்காடு மாவட்டத்தை அடைகின்றது. இச்சாலையில் செங்கற்பட்டுக்கும் மதுராந்தகத்துக்கும் இடையே பாலாற்றின்மீது ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர, நமது மாவட்டத்திலுள்ள பல ஊர்களையும் இணைக்கும் சாலைகள் உள்ளன. படத்தைப் பார்த்து அவற்றை அறிந்து கொள்ளுங்கள்.

இருப்புப் பாதைகள் : சென்னை நகரிலிருந்து வடக்கு, மேற்கு, தெற்குத் திசைகளில் செல்லும் இருப்புப்பாதைகள் நமது மாவட்டத்தின் வழியே செல்லுகின்றன. இவற்றுள் வடக்கிலும் மேற்கிலும் செல்பவை அகன்ற பாதைகள். நமது மாவட்டத்திற்குள் இவற்றின் மொத்த நீளம் $58\frac{1}{2}$ மைல்கள். தெற்குநோக்கிச் செல்லும் பாதை சற்றுக் குறுகலானது. நமது மாவட்டத்தில் இதன் நீளம் $89\frac{1}{4}$ மைல்கள் ஆகும்.

வடக்கு நோக்கிச் செல்லும் இருப்புப்பாதை திருவொற்றியூர், எண்ணூர், பொன்னேரி ஆகியவற்றின் வழியே நெல்லூர் மாவட்டத்தை அடைகிறது. மேற்கு நோக்கிச் செல்வது, பெரம்பூர், ஆவடி, திருவள்ளூர் ஆகியவற்றின் வழியே வட ஆற்காடு மாவட்டத்திற்குள் பிரவேசிக்கின்றது. தெற்கு நோக்கிச் செல்லும் இருப்புப்பாதை சைதாப் பேட்டை, பரங்கிமலை, பல்லாவரம், தாம்பரம், செங்கற்பட்டு, மதுராந்தகம் ஆகியவற்றின் வழியே, தென் ஆற்காடு மாவட்டத்தை அடைகின்றது. செங்கற்பட்டு, ஓர் இருப்புப்பாதைச் சந்திப்பு. இங்கிருந்து ஓர் இருப்புப்பாதை வடமேற்காக வாலாஜா பாத், காஞ்சிபுரம் ஆகியவற்றின் வழியே வடஆற்காடு மாவட்டத்திற்குள் பிரவேசித்து, திருவள்ளூரிலிருந்து செல்லும் இருப்புப் பாதையுடன் அரக்கோணம் என்னுமிடத்தில் கூடுகிறது.

சென்னைக் கடற்கரையிலிருந்து தெற்கே சுமார் 18 மைல் தூரத்திலுள்ள வண்டலூர் வரை செல்லும் இரயில் வண்டிகள் மின்சாரத்தால் இயக்கப்படு

சாலைகளும் இருப்புப் பாதைகளும்



கின்றன. இவை சில நிமிடங்களுக்கு ஒன்ருக ஓடுவதால், வெளி இடங்களிலிருந்து சென்னேக்குத் தினந்தோறும், பல வேலைகளுக்காக வந்து செல்லும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு இவை பெரிதும் பயன்படுகின்றன. ஆனல், நெடுந்தூரம் செல்லும் இரயில் வண்டிகள் நீராவி எஞ்சின்களால் இழுத்துச் செல்லப்படுகின்றன.

நீர்ப்பாதை: நமது மாவட்டத்தின் வட கோடியிலிருந்து தென்கோடி வரை கடற்கரையையொட்டி, சுமார் 98 மைல் நீளமுள்ள பக்கிங்காம் கால்வாய் இருக்கின்றது. இதன் வழியே, படகுகளில் விறகு, அரிசி, சுண்ணும்பு, கிளிஞ்சில் ஆகியவை சென்னே நகருக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. சிலர் இவற்றில் உல்லாசப் பிரயாணமும் செய்கின்றனர்.

ஆகாய விமானப் பாதைகள்: தற்காலத்தில் ஆகாய விமானங்கள், மக்கள் வெவ்வேறு இடங்களுக்கு வெகு துரிதமாகச் செல்லவும், தபால்கள், சிறு பொருள்கள் ஆகியவற்றை விரைவாக அனுப்பவும் பயன்படுகின்றன. நமது மாவட்டத்தில் பல்லாவரத்துக்குச் சமீபத்தில் மீனம்பாக்கம் என்னுமிடத்தில் ஆகாய விமான நிலேயம் இருக்கின்றது. இங்கிருந்து தினந்தோறும் டில்லி, கல்கத்தா, பம்பாய், சிங்கப்பூர், பெங்களூர், திருவனந்தபுரம், கொழும்பு முதலிய இடங்களுக்கு விமானங்கள் செல்கின்றன; அவ்விடங்களிலிருந்தும் விமானங்கள் வருகின்றன.

விளுக்கள்

1. போக்குவரவு வழிகளின் அவசியமென்ன?
2. நமது மாவட்டத்தின் வழியே செல்லும் முக்கிய சாலேகளேயும் இருப்புப் பாதைகளேயும் கூறுக.

3. நம் மாவட்டத்திலுள்ள நீர்ப்பாதையைக் குறிப்பிடு.

4. நம் மாவட்டத்திலுள்ள ஆகாயவிமான நிலையம் எது? அங்கிருந்து எங்கெங்கு விமானங்கள் செல்லுகின்றன ?

8. வாணிகம்

மக்களின் நல்வாழ்வுக்குப் பல பொருள்கள் தேவையாக உள்ளன. இவை எல்லாவற்றையும் அவரவர்களே செய்து கொள்ளுதல் இயலாது. உதாரணமாக, விவசாயிகள் உணவு தானியங்கள், பருத்தி முதலியவற்றைப் பயிரிடுகிறார்கள். நெசவாளிகள் ஆடை நெய்கிறார்கள். ஒவ்வொருவரும் தாம் செய்யும் பொருளில் தமக்குத் தேவையானதை வைத்துக்கொண்டு, மிகுந்ததை மற்றவர்களுக்குக் கொடுத்து, அவர்களிடமிருந்து தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொள்கிறார்கள். உதாரணமாக விவசாயி, ஆடை நெய்பவருக்கு உணவு, பருத்தி ஆகியவற்றைக் கொடுத்துவிட்டு, அவரிடமிருந்து ஆடைகளை வாங்கிக் கொள்ளுகின்றார். இதுவே வாணிகம் எனப்படும்.

நமது மாவட்டத்திலிருந்து பருத்தி, பட்டு ஆடைகள், புன்செய்த் தானியங்கள், நிலக்கடலை, விறகு, உப்பு, தீப்பெட்டிகள், சைக்கிள்கள், மோட்டார் கார்கள் முதலியன பிற இடங்களுக்கு அனுப்பப் படுகின்றன. விலையுயர்ந்த பட்டும், சரிகைச் சேலைகளும் வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

காஞ்சிபுரம், சைதாப்பேட்டை, மதுராந்தகம், பொன்னேரி, உத்திரமேரூர், செங்கற்பட்டு,

வாலாஜாபாத், எண்ணூர், ஆவடி ஆகிய ஊர்கள் நம் மாவட்டத்தின் முக்கிய வணிகத் தலங்களாகும்.

வினக்கள்

1. வாணிகம் என்றால் என்ன?
2. நம் மாவட்டத்திலிருந்து பிற இடங்களுக்கு அனுப்பப் படும் பொருள்கள் யாவை?
3. நம் மாவட்டத்திலுள்ள முக்கிய வணிகத் தலங்கள் யாவை?

9. மக்கள் செறிந்து வாழ்தல்

நகரங்களில் மக்கள் மிகுதியாகவும், கிராமங் களில் குறைவாகவும் வசிக்கின்றனர். நகரங்களில் பிழைப்புக்கான வசதிகள், கல்வி வசதி, மருத்துவ வசதி, போக்குவரவு வசதி போன்ற வசதிகள் உள்ளன. நீர்வளம், நிலவளம், வெப்ப தட்ப நிலை, விளைபொருள்கள், தொழிற்சாலைகள் ஆகியவையெல் லாம் அமைந்திருப்பதைப் பொறுத்து மக்கள் அதிக மாகவோ குறைவாகவோ வசிக்கின்றனர். பொது வாகப் பட்டணங்களில் மக்கள் திரளாக வசிக் கின்றார்கள்.

இனி, நம் மாவட்டத்தில் மக்கள் எப்பகுதிகளில் அதிகமாக வசிக்கின்றனர், எப்பகுதிகளில் குறைந்த எண்ணிக்கையில் வசிக்கின்றனர் என்பதைப் பார்ப்போம். காஞ்சிபுரத்தில் மக்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். அது ஒரு புண்ணியத் தலமாக இருத்தலாலும், நெசவுத் தொழில் சிறப்பாக நடைபெறும் ஊராக அமைந்துள்ளதாலும் அங்கு மக்கள் அதிக அளவில் வசிக்கின்றனர்.

பெரம்பூர், எண்ணூர், வண்டலூர், ஆவடி முதலிய இடங்களில் பெரிய அளவில் தொழில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதால் அங்கு மக்கள் செறிந்து வாழ்கின்றனர். மதுராந்தகம், சைதாப்பேட்டை, செங்கற்பட்டு, வாலாஜாபாத், உத்திரமேரூர், ஸ்ரீபெரும்புதூர் முதலிய இடங்களிலும் மக்கள் அடுத்தாற்போன்று அதிக அளவில் வசிக்கின்றனர். இவ்வூர்களில் அல்லாமல் தாலூகாத் தலைநகர்களில் மக்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஏனைய ஊர்களில் அங்குள்ள வசதிக்குத் தக்கவாறு மக்கள் நெருக்கம் உள்ளது. கிராமங்களில் விவசாயம் அதிகமாக உள்ள இடத்தில் சற்று அதிகமாகவும், இதர இடங்களில் மக்கள் குறைவாகவும் வசிக்கின்றனர்.

வினாக்கள்

1. மக்கள் அதிகமாக எவ்வித வசதிகள் உள்ள இடத்தில் வசிக்கின்றனர் ?
2. நம் மாவட்டத்தில் எங்கெங்கு அதிகமாக மக்கள் வசிக்கின்றனர் ? காரணங் கூறவும்.

10. நம் மாவட்டப் பொருளாதார சமூக முன்னேற்றத் திட்டங்கள்

நம் நாடு சுதந்தரம் பெற்ற பிறகு, அரசாங்கத்தின் உதவியுடன் மக்களே தம்முடைய சுயமுயற்சியால், கிராமங்களில் பயிர்த் தொழில், போக்குவரவு மார்க்கங்கள், சுகாதார வசதி, கல்வி வசதி, ஆகியவற்றை ஏற்றம்பெறச் செய்யத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவை சமுதாய நலத் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம், ஐந்தாண்டுத் திட்டங்கள் முதலியனவாகும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பயிர்த்

தொழிலை ஏற்றம்பெறச் செய்வதும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தொழில்களை ஏற்றம்பெறச் செய்வதும் நோக்கங்களாக இருந்தன. இப்பொழுது நடைமுறையில் செயலாற்றப்பட்டு வரும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பயிர்த் தொழிலுக்கு முதலிடமும் கைத்தொழில், சிறு தொழில்கள், மின்சாரம், கல்வி வசதி, போக்கு வரத்து, வேலை வாய்ப்புக்கள் முதலியவற்றிற்கு அடுத்த இடமும் அளிக்கப்பட்டுள்ளது.

நம் மாவட்டத்தில் திட்டங்களால் ஏற்பட்டுள்ள நலன்களை இனிக் கவனிப்போம். நீருயர நெல் லுயரும் என்பார்கள். விரைவில் பயன்தரக்கூடிய சிறுபாசனத் திட்டங்கள் நம் மாவட்டத்தில் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின்படி குளங்கள் வெட்டல், அணைகள் கட்டல், கால் வாய்கள் தோண்டல், உபயோகத்தில் உள்ள பாசனக் குளங்கள் உட்பட பல நீர்நிலைகளை மரா மத்துச் செய்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. திம்ம சமுத்திரம் ஏரி, அயனம்பாக்கம் ஏரி, மாடம்பாக்கம் ஏரி ஆகியவை பழுது பார்க்கப் பட்டன. உத்திரமேரூர் குளக்கால்வாய் அகல மாக்கப்பட்டது. பல வருடங்களாகச் செப்பனிடப் படாமலிருந்த சாலவாக்கம் கால்வாய் செப்பனிடப் பட்டது. நம் மாவட்டத்தில் பாசன வளத்தை அதிகப்படுத்தச் சுமார் 160 சிறு பாசன வேலைகள் அமுலாக்கப்பட்டன.

உயர்தர விதைகளை விவசாயிகளுக்கு வழங்கு வதற்காக, காஞ்சிபுர வட்டாரத்தில் சிறு காவேரிப்

பாக்கத்திலும், பூண்டி வட்டாரத்தில் கொழுந்தலூர், ஊத்துக்கோட்டை ஆகிய இடங்களிலும் அரசாங்க விதைப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திரூரில் அரிசி ஆராய்ச்சி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. சாகுபடியில் முன்னேற்றம் பெறுவதற்காகப் புதிய கருவிகள் குறைந்த விலையில் குடியானவர்களுக்கு வழங்கப்படுகின்றன. உணவுப் பயிர்களை ஏற்றம்பெறச் செய்வதுபோல, வியாபாரப் பயிர்களையும் அபிவிருத்தி செய்வதன் பொருட்டு, எண்ணெய் வித்துகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சுமார் 20,000 ஏக்கர்களில் பலவித அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கால்நடை அபிவிருத்திக்கென செங்கற்பட்டு, திருக்கழுக்குன்றம், மதுராந்தகம், சாலவாக்கம் ஆகிய இடங்களில் அபிவிருத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காட்டுப்பாக்கத்தில் ஓர் ஆட்டுப் பண்ணை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சமுதாயநல வளர்ச்சித் திட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் அடங்கியுள்ளன. வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, உடல் நலமும் கிராமச் சுகாதாரமும், கல்வி, சமூகக் கல்வி, போக்குவரத்து, கிராமக் கலைகள், கைத்தொழில், கதர், குடியிருப்பு, மாதர் நலம் ஆகியன அவற்றில் சிலவாகும். கிராம வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் ஒரு மறுமலர்ச்சியைத் தோற்றுவிப்பதே வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம். நம் மாவட்டத்தில் 27 சமுதாயநல வளர்ச்சி வட்டாரங்கள் உள்ளன.

திட்டக் காலத்தில் நம் மாவட்டத்தில் சிறு அளவுத் தொழில்களும் கனரகத் தொழில்களும் அபிவிருத்தி அடைந்துள்ளன. இவற்றைக் குறித்து முந்திய பாடமொன்றில் படித்திருப்பீர்கள்.

விஞக்கள்

1. திட்டங்கள் எதற்காக வகுக்கப்பட்டுள்ளன ?
2. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோள்கள் யாவை ?
3. நம் மாவட்டத்தில் பாசன வசதிக்காகவும் விவசாய அபிவிருத்திக்காகவும் செய்யப்பட்டுள்ள காரியங்கள் யாவை ?
4. சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தில் அடங்கியுள்ள திட்டங்கள் யாவை ?

நான்காம் வகுப்பு

தென் ஆற்காடு மாவட்டம்

நிலநூல்

1. இருப்பிடம்

தென் ஆற்காடு
மாவட்டம்
தாலூக்காக்களும் முக்கிய
நகரங்களும்

நாம் வசிக்கும் மாவட்டம் தென் ஆற்காடு மாவட்டம் எனப்படும். இது தமிழ் நாட்டின் கிழக்

குப் பகுதியில், கடற்கரையையொட்டி இருக்கின்றது. இதன் வடக்கில் செங்கற்பட்டு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களும், கிழக்கில் வங்காள விரிகுடாவும், தெற்கில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களும், மேற்கில் சேலம், வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களும் எல்லைகளாக அமைந்துள்ளன. நம் மாவட்டத்தின் பரப்பளவு 4024 சதுர மைல்கள் ஆகும்.

நிர்வாக வசதிக்காக நம் மாவட்டம் எட்டுத் தாலூகாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன: (1) திண்டிவனம், (2) விழுப்புரம், (3) கடலூர், (4) சிதம்பரம், (5) விருத்தாசலம், (6) கள்ளக்குறிச்சி, (7) திருக்கோயிலூர், (8) செஞ்சி.

வினாக்கள்

1. *நம் மாவட்டத்தின் எல்லைகளைக் கூறு.*
2. *நிர்வாக வசதிக்காக நம் மாவட்டம் எத்தனை தாலூகாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன? அவற்றைக் கூறுக.*

2. இயற்கை அமைப்பு

நம் மாவட்டத்தில், மேற்கில் கள்ளக்குறிச்சித் தாலூகாவிலும், வடக்கில் செஞ்சித் தாலூகாவிலும் குன்றுகள் இருக்கின்றன. மற்றப் பகுதிகள் ஏறக்குறைய சமவெளிப் பிரதேசங்கள். கள்ளக்குறிச்சித் தாலூகாவில் சுமார் 2000 அடி முதல் 2500 அடிவரை உயரமுள்ள மலைத்தொடர்கள் உள்ளன. அத்தொடர்களுக்குக் கல்ராயன் மலை எனப் பெயர். இவை சேலம் மாவட்டத்திலும் வியாபித்துள்ளன. இம் மலைத்தொடரின் மத்தியில் ஆத்தூர்க் கணவாய்

உள்ளது. சேலம் மாவட்டத்திற்குச் செல்லும் இருப்புப்பாதையும் சாலையும் இந்தக் கணவாய் வழியாகச் செல்கின்றன. செஞ்சித் தாலூகாவிலும்



தென் ஆர்காடு மாவட்டம்
இயற்கை அமைப்பும்,
நதிகளும்

திண்டிவனம் தாலூகாவிலும் தியாக துர்க்கத்துக்கு அருகிலும் குன்றுகள் உள்ளன.

ஆறுகள்:—நம் மாவட்டத்தில் பாயும் நதிகளுள் முக்கியமானவை தென் பெண்ணை, செஞ்சியாறு

அல்லது வராகநதி, கடிலம், வெள்ளாறு, கொள்ளிடம் ஆகியவை.

தென்பெண்ணை ஆறு, மைசூர் இராச்சியத்தில் தொடங்கி, வடஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்கள் வழியே பாய்ந்து, வங்காள விரிகுடாவில் கலக்கின்றது.

செஞ்சியாறு அல்லது வராகநதி, செஞ்சித் தாலூகாவில் தொடங்கிப் புதுச்சேரிக்கு அருகில் கடலில் கலக்கின்றது. இதில் அதிக நீர்ப்பெருக்குக் கிடையாது.

கடிலம் ஆறு, கல்ராயன் மலைக்கு அருகில் தொடங்கி, திருக்கோயிலூர், விழுப்புரம் தாலூகாக்களின் வழியே பாய்ந்து, தென்பெண்ணை ஆற்றின் முகத்துவாரத்துக்கு அருகிலேயே கடலில் கலக்கின்றது.

வெள்ளாறு, சேலம் மாவட்டத்தில் கல்ராயன் மலையில் தொடங்குகின்றது. நம் மாவட்டம் கல்ராயன் மலையிலிருந்தும் சில துணையாறுகளைப் பெறுகின்றது. இவற்றுள் முக்கியமானது மணிமுத்தாறு ஆகும். இது பரங்கிப்பேட்டைக்கு அருகில் கடலுடன் கலக்கின்றது. இதன் முகத்துவாரம் அகலமாயும் ஆழமாயும் இருப்பதால், இங்குப் படகுகள் வந்து தங்க வசதியாக உள்ளது. இக்காரணத்தினலேயே பரங்கிப்பேட்டை ஒரு துறைமுகமாயிற்று.

கொள்ளிடம், காவிரி நதியிலிருந்து பிரியும் முக்கிய கிளையாறு ஆகும். இது, நம் மாவட்டத்திற்

கும், தஞ்சாவூர் மாவட்டத்திற்கும் எல்லையாக அமைந்துள்ளது. இதன் குறுக்கே அணைகட்டி, சிதம்பரம் தாலூகாவிலுள்ள வீராணம் ஏரியில் தேக்கி, பாசனத்திற்கும் பயன்படுத்துகின்றனர். இம்மாவட்டத்திலுள்ள மற்ற முக்கிய ஏரிகள், திண்டிவனம் தாலூகாவிலுள்ள காசிவெளிக்குளமும், கடலூர் தாலூகாவிலுள்ள பெருமாள் ஏரியும் ஆகும்.

வினக்கள்

1. நம் மாவட்டத்தில் பாயும் ஆறுகள் யாவை?
2. தென் பெண்ணையாறு எங்கு உற்பத்தியாகிறது?
3. பரங்கிப்பேட்டை ஒரு துறைமுகமாக விளங்கக் காரணமென்ன?
4. ஆத்தூர்க் கணவாய் எங்குள்ளது? இந்தக் கணவாய் எவ்விதம் பயன்படுகிறது?
5. பாசனத்திற்கு உதவும் முக்கியமான ஏரிகளைக் குறிப்பிடவும்.

3. தட்ப வெப்ப நிலை

நம் மாவட்டத்தில் வெப்பம் பொதுவாகச் சற்று அதிகமாகவே உள்ளது. கடற்கரை ஓரமாகவுள்ள பகுதிகளில் கடற்காற்று வீசுவதால் வெப்பம் சற்றுக் குறைவாகக் காணப்படுகிறது. கடற்கரைப் பகுதி நம் மாவட்டத்தில் குறைவாகவே உள்ளது. எனவே, பெரும்பான்மையான பகுதி உள்நாட்டுப் பகுதியாக இருப்பதால் அங்கெல்லாம் வெப்பம் அதிகமாக உள்ளது.

குளிர்காலத்தில், வட கிழக்குப் பருவக் காற்றுல் செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம்வரை ஆண்

டொன்றுக்குச் சுமார் 50 அங்குலம் மழைபெய்கிறது. உள்நாட்டுப் பகுதிகளைவிட, கடற்கரைத் தாலூகாக்களில் மழை சற்று அதிகமாகப் பெய்கிறது. இக் காலத்தில், கடற்கரைப் பகுதிகளில் சிற்சில சமயங்களில் சூறாவளிகள் தோன்றி, காற்றும் மழையும் சேர்ந்து, பெருத்த சேதம் விளைவிப்பது உண்டு.

நம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி தாலூகா மிகக் குறைந்த அளவு மழையைப் பெறுகிறது. கடற்கரையை ஒட்டிய கடலூர், சிதம்பரம் ஆகிய தாலூகாக்களில் கூடுதலாக மழை பெய்கிறது.

வினாக்கள்

1. நம் மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் மழை அதிகமாகப் பெய்கிறது? அதற்குக் காரணமென்ன?
2. ஆண்டொன்றுக்கு நம் மாவட்டத்தில் பெய்யும் மழை அளவு என்ன?
3. எந்தப் பருவக்காற்றால் நம் மாவட்டத்தில் மழை பெய்கிறது?

செய்முறைப் பயிற்சி

1. காற்று, மழை, வெயில் இவற்றைக் குறிப்பிடும் பழமொழிகளைச் சேகரிக்கவும்.

2. உனது ஊரின் தட்பவெப்ப நிலையைக் காட்டும் அட்டவணை ஒன்று தயாரிக்கவும். மழை அதிகமாகப் பெய்யும் நாளன்று, மழை அளக்கும் கருவி கொண்டு அளந்து பார்க்கவும்.

4. தொழில்கள்

பயிர்த்தொழில் :

நம் மாவட்டத்தில் ஆங்காங்கு மண்வளம், நீர்வளம் ஆகியவற்றிற்குத் தக்கவாறு பயிர்களும் மாறுபட்டிருக்கின்றன. பெரும்பான்மையான மக்கள் பயிர்த்தொழிலே செய்து வருகின்றனர். பயிர் வகைகள், உணவுப் பயிரென்றும் வாணிகப் பயிரென்றும் இருவகைப்படும். நம் மாவட்டத்தில் முக்கியமான விளைபொருள் நெல். சிதம்பரம் தாலூகாவில் நெல் அதிகமாகப் பயிராகின்றது. சிதம்பரம் அரிசியை மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். சிதம்பரம் தாலூகா தவிர தண்ணீர் வசதியுள்ள மற்ற இடங்களிலும் நெல் பயிரிடப் படுகிறது.

வளம் சற்று குறைவாயுள்ள பகுதிகளில் கேழ்வரகு, கம்பு, வரகு ஆகியவை பயிராகின்றன. இவ்விதமான உணவுப் பொருள்களைத் தவிர, கரும்பு, பருத்தி, நிலக்கடலை, முந்திரி ஆகிய பயிர்களும் பயிரிடப்படுகின்றன. கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, விருத்தாசலம் ஆகிய தாலூகாக்களில் கரும்பு நன்கு விளைகின்றது. கடலூர் தாலூகாவில் நெல்லிக்குப்பம் என்ற இடத்தில் சர்க்கரை ஆலை அமைந்துள்ளது. நிலக்கடலை, நம் மாவட்டத்தின் முக்கியப் பயிர். இது பெருமளவில் பயிராகின்றது. இது வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றது. பருத்தி, விருத்தாசலம் தாலூகாவிலும் முந்திரி, சிதம்பரம் தாலூகாவிலும் அதிகமாகப் பயிராகின்றன. நம்

மாவட்டத்தில் பருத்தி ஆலைகள் இல்லாததால், பருத்தியை இதர மாவட்டங்களுக்கு அனுப்புகின்றனர். கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர் ஆகிய தாலூகாக்களில் புகையிலை பயிராகின்றது.

கடலூர் தாலூகாவில் பாலூரிலும் திண்டிவனத்திலும் விவசாயப் பண்ணைகள் இருக்கின்றன. இங்கு நெல், தென்னை, கரும்பு முதலியனபற்றி ஆராய்ச்சிகள் நடத்துகின்றனர். நெய்வேலி, சேத்தியாத்தோப்பு, வண்டராயன்பட்டு, வடக்கநந்தல், வெள்ளப்பாக்கம் ஆகிய இடங்களில் விதைப் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. கடலூரில் மத்திய கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வினாக்கள்

1. நம் மாவட்டத்தில் விளையும் முக்கியமான விளை பொருள் யாது?
2. நம் மாவட்டத்தில் நெல் எந்தத் தாலூகாவில் அதிகமாகப் பயிரிடப்படுகிறது?
3. உணவுப் பொருளைத் தவிர வேறு என்ன பயிர்கள் நம் மாவட்டத்தில் பயிரிடப்படுகின்றன?
4. நம் மாவட்டத்தில் கரும்பு எங்குப் பயிரிடப்படுகிறது?
5. சர்க்கரைத் தொழிற்சாலையும் கரும்பு ஆராய்ச்சிநிலையமும் நம் மாவட்டத்தில் எங்கு நிறுவப்பட்டுள்ளன?
6. நம் மாவட்டத்தில் புகையிலை எங்குப் பயிரிடப்படுகிறது?
7. விவசாயப் பண்ணைகள், விதைப் பண்ணைகள் ஆகியவை நம் மாவட்டத்தில் எங்குள்ளன?

செய்முறைப் பயிற்சி

1. சர்க்கரைத் தொழிற்சாலைக்குச் சென்று, அங்கு எப்படிக் கரும்பு, சர்க்கரையாக மாற்றப்படுகிறது என்பதைப் பார்த்து வரவும்.

2. உங்கள் பள்ளிக்கூட மியூசியத்தில் நம் மாவட்டத்தில் பயிராகும் நெல் வகைகள் பலவற்றின் மாதிரிகளைச் சேகரித்து வைக்கவும்.

3. விவசாயப் பண்ணை, விதைப் பண்ணை ஆகியவற்றைப் பார்த்து வரவும்.

கால் நடை வளர்த்தல்:

பழங்காலம் முதற்கொண்டு ஆடு, மாடு, முதலிய வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகளை நாம் செல்வங்களாகவே கருதி வந்திருக்கிறோம். நம்மால் வளர்க்கப்படும் அந்த விலங்குகள் நாளாவட்டத்தில் நமக்கு மிக்க பயன் தருகின்றன. வேளாண்மையுடன் விலங்குகள் நெருங்கிய தொடர்புகொண்டுள்ளன. விவசாயம் செய்வதற்கு ஆடுமாடுகள் மிகவும் உதவுகின்றன.

நம் மாவட்டத்தில் உயர்தர மாடுகள் இல்லாத காரணத்தினால், அவற்றின் தரத்தை உயர்த்துவதற்காக அரசாங்கம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய இடங்களில் கால்நடை அபிவிருத்தி நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. வளவனூர், விக்ரவாண்டி, மைலம் ஆகிய இடங்களில் கிராமத் துணைப்பெருக்க நிலையங்களை நிறுவியுள்ளது. இவ்விடங்களில் தரமான பொலி காளைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. கால் நடைகளுக்கு நோய் அணுகாமல் தடுப்பதற்குப் பல இடங்களிலும் விலங்கு மருத்துவ நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சின்னசேலம் என்னுமிடத்தில் ஆட்டுப்பண்ணையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறும்பை ஆடு இனத்தைப் பெருக்குவதற்கு இப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. பீக்க

னீர், ரஷ்யா ஆகிய இடங்களிலிருந்து கொணரப் பட்ட உயர்தர ஆடுகளும் இப்பண்ணையில் உள்ளன.

கோழி வளர்ப்பிலும், மீன் வளர்ப்பிலும் அர சாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. புவனகிரியில் கோழி வளர்ப்புப் பண்ணை ஒன்று ஏற்படுத்தப்பட் டுள்ளது. கடற்கரை யோரங்களைச் சேர்ந்த 29 கிராமங்களில் வாழும் மீனவர்களுக்கு மீன் பிடிக்க உதவுவதற்கு அரசாங்கம் கடன் வழங்கியுள்ளது.

வினாக்கள்

1. நம் மாவட்டத்தில் கால்நடை வளர்ப்புக்கு அரசாங் கம் செய்துள்ள உதவி யாது?
2. ஆட்டுப்பண்ணை நம் மாவட்டத்தில் எங்கு ஏற்படுத் தப்பட்டுள்ளது? அங்கு எந்நாட்டு ஆடுகள் உள்ளன?

செய்முறைப் பயிற்சி

1. உனது கொல்லையில் இடமிருக்குமாயின் அங்கு அரசாங்க உதவி பெற்று ஆடு, கோழி ஆகியவற்றை வளர்க்கவும்.

2. மாடுகள், ஆடுகள், கோழிகள் ஆகியவற்றின் இனங் களைப்பற்றி கால்நடை அதிகாரிகளிடம் கேட்டு, அவற்றின் பெயர்களைத் தெரிந்துகொள்.

முக்கிய கைத்தொழில்கள் :

நம் மாவட்டத்தில் பெரும்பாலான மக்கள் பயிர்த் தொழிலை மேற்கொண்டுள்ளனர். எனினும், ஆங்காங்கு இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு கைத்தொழில்கள் ஏற்பட்டுள்ளன.

நம் மாவட்டத்தில் விளையும் கரும்பை எல் லாம் பயன்படுத்தி, சர்க்கரை, மிட்டாய் வகைகள் ஆகியவை தயாரிக்க, பாரி கம்பெனியார் நெல்லிக் குப்பத்தில் ஒரு பெரிய சர்க்கரைத் தொழிற்சாலையை அமைத்திருக்கின்றனர். விழுப்புரத்தில் நிலக்கடலை

எண்ணெய் பிழியும் பல ஆலைகள் உள்ளன. இங்கு இரயில்வே தொழிற்சாலையொன்றும் உள்ளது.



நெய்வேலித் திட்டம்-ஒரு பகுதி

நெய்வேலி என்னுமிடத்தில் ஏராளமான பழுப்பு நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டு, இப்பொழுது வெட்டியெடுக்கும் வேலை நடந்து வருகிறது. இங்கு நிலக்கரி வெட்டியெடுக்கும் தொழிலைத் தவிர அதைச் சார்ந்த பல தொழில்களும் நடைபெறுகின்றன. வெண்மையான களிமண் கொண்டு பீங்கான் பொருள்கள் செய்யும் தொழிற்சாலை, இரசாயன உரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை போன்றவை இங்கு ஏற்பட்டுள்ளன. மேலும், இங்கு வீட்டில் அடுப்புக்கு உதவும்படியாக, நிலக்கரித் தூளிலிருந்து அதிக வெப்பம் தரக்கூடிய 'பிரிக்கட்' என்ற எரிபொருள் தயாரித்து வருகிறார்கள்.

குறிஞ்சிப்பாடியில் நெசவுத் தொழில் நடைபெறுகிறது. கள்ளக்குறிச்சியில் வெல்லம் தயார்

செய்யப்படுகிறது. கள்ளக்குறிச்சி தாலூகாவில் சில இடங்களில் கம்பள நெசவு நடைபெறுகிறது. பண்ருட்டியில் அழகிய மண் பொம்மைகள் செய்யப் படுகின்றன. பாய் பின்னும் தொழில் சிதம்பரம் தாலூகாவில் பலவிடங்களில் நடைபெறுகிறது. மரக்காணத்திலும் கடலூரிலும் உப்பளங்கள் உள்ளன.

வினுக்கள்

1. கைத்தொழில்கள் எதற்கேற்றவாறு அமைகின்றன?
2. நம் மாவட்டத்தில் சர்க்கரைத் தொழிற்சாலை எங்கு அமைந்துள்ளது?
3. நெய்வேலியில் நடைபெறும் தொழில்கள் யாவை?
4. நெசவுத் தொழில், பாய் பின்னுதல், பொம்மைகள் செய்தல் போன்ற தொழில்கள் நம் மாவட்டத்தில் எங்கெங்கு நடைபெறுகின்றன?
5. நம் மாவட்டத்தில் உப்பளங்கள் எங்கு உள்ளன?

செய்முறைப் பயிற்சி

1. நிலக்கரியில் பல வகைகள், களிமண்ணில் பல வகைகள் ஆகியவற்றை உங்கள் பள்ளி மியூசியத்தில் சேகரிக்கவும்.

2. உப்பளமொன்றிற்குச் சென்று அங்கு உப்பு எப்படித் தயாரிக்கப்படுகிறது என்று அறியவும்.

3. நெல்லிக்குப்பத்திற்கும், நெய்வேலிக்கும் உல்லாசப் பயணம் சென்று அங்கு நடைபெறும் தொழில்களைப் பார்த்து வரவும்.

4. சர்க்கரையும், நிலக்கரியும் தங்கள் கதையைச் சொல்லுவதுபோலக் கட்டுரை வரையவும்.

5. போக்கு வரவு: முக்கிய வழிகள்

பல வேலைகளையொட்டி, மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. மேலும், வாணிபத்திற்காகப் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்கு அனுப்ப வேண்டியிருக்கின்றது. இவற்றிற்காகப் பலவகைப் போக்குவரவு மார்க்கங்களும் சாதனங்களும் இருக்கின்றன. சாலைகள், இருப்புப் பாதைகள், நீர்ப்பாதைகள் ஆகியவை முக்கியப் போக்கு வரவு மார்க்கங்களாகும். வண்டிகள், மோட்டார்கள், இரயில் வண்டிகள், படகுகள், கப்பல்கள் ஆகியவை முக்கியப் போக்குவரவுச் சாதனங்களாகும்.

சாலைகள்:—நம் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சிறந்த சாலைகள் உள்ளன. சென்னையினின்றும் கன்னியாகுமரி, இராமேஸ்வரம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை, நம் மாவட்டத்தில் திண்டிவனம், விழுப்புரம், உளுந்தூர்ப்பேட்டை ஆகிய நகரங்கள் வழியே செல்கின்றது. திண்டிவனத்தினின்றும் பல சாலைகள் செல்லுகின்றன. ஒன்று, கிழக்கே கடற்கரையிலுள்ள மரக்காணத்துக்கும், மற்றொன்று, மேற்கே செஞ்சி வழியே திருவண்ணாமலைக்கும் செல்லுகின்றன. விழுப்புரத்தினின்றும் வடக்கே செஞ்சி வழியே, வட ஆற்காடு மாவட்டத்துக்கு ஒரு சாலை செல்லுகின்றது.

கடலூரினின்றும் வடக்கே புதுச்சேரி, மரக்காணம் ஆகிய இடங்களுக்கும், தெற்கே சிதம்பரத்துக்கும், மேற்கே பண்ருட்டி, திருக்கோயிலூர் ஆகிய

ஊர்களின் வழியே திருவண்ணாமலைக்கும் சாலைகள் உள்ளன. பண்ருட்டிக்குச் சற்று மேற்கில் ஒரு சாலை பிரிந்து, உளுந்தூர்ப்பேட்டை, தியாகதுர்க்கம், கள்ளக்குறிச்சி ஆகிய ஊர்களின் வழியே சேலத்துக்குச்

செல்லுகின்றது. விருத்தாசலமும், பல சாலைகள் சந்திக்குமிடமாகும். இங்கிருந்து எங்கெங்குச் சாலைகள் செல்லுகின்றன என்பதைப் படத்தில் பாருங்கள்.

இருப்புப் பாதைகள்:— நம் மாவட்டத்தின்

வழியே செல்லும் இருப்புப்பாதையின் மொத்த நீளம் சுமார் $251\frac{1}{4}$ மைல் ஆகும். இதில் $7\frac{1}{4}$ மைல் நீளம் புதுச்சேரிப் பிரிவின் வழியே செல்லுகின்றது. சென்னையினின்று வரும் இருப்புப்பாதை திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, கடலூர், சிதம்பரம் ஆகிய ஊர்களின் வழியே தஞ்சாவூர் மாவட்டத்துக்குச் செல்லுகிறது. விழுப்புரத்தினின்றும் ஒரு பாதை, விருத்தாசலம் வழியே திருச்சிராப்பள்ளிக்குச் செல்லுகின்றது. இது குறுக்குப் பாதை (கார்ட் லைன்) எனப்படும். விழுப்புரத்தினின்றும் கிழக்கே புதுச்சேரிக்கும், வடமேற்கே திருக்கோயிலூர் வழியே வட ஆற்காடு மாவட்டத்துக்கும் இருப்புப் பாதைகள் செல்லுகின்றன. கடலூரிலிருந்து நெய்வேலி, விருத்தாசலம் ஆகிய ஊர்களின் வழியே சேலத்துக்கு ஒரு பாதை செல்லுகின்றது. விமான வழிகள் எதுவும் நம் மாவட்டத்தில் கிடையா.

வினாக்கள்

1. தேசிய நெடுஞ்சாலை நம் மாவட்டத்தில் எவ்வழியே செல்லுகிறது?
2. நம் மாவட்டத்திலுள்ள சாலைகளைக் கூறு.
3. நம் மாவட்டத்திலுள்ள இருப்புப் பாதைகளைக் குறிப்பிடு.

செய்முறைப் பயிற்சி

1. நம் மாவட்டப் படத்தில் நெடுஞ்சாலைகளையும் இருப்புப் பாதைகளையும் குறிக்கவும்.

6. வாணிகம்

நமக்குத் தேவையான பொருள்கள் அனைத்தும் நம் ஊரிலேயே கிடைத்து விடுவதில்லை. நம் ஊரில் உற்பத்தியாகும் பொருள்கள் அனைத்தையும் நாமே வைத்துக் கொள்வதுமில்லை. எனவே, நமது தேவைக்குப்போக மீதியுள்ள பொருள்களை மற்ற ஊர்களுக்கு அனுப்பி வைக்கிறோம். அதேபோன்று, நமக்குத் தேவைப்படும் பொருள்களை மற்ற ஊர்களிலிருந்து வரவழைத்துக் கொள்கிறோம். இதைப் போலவே நாடுகளுக்கு இடையேயும் நடக்கின்றது. நம் ஊரிலிருந்து பிற இடங்களுக்கு அனுப்பி வைக்கும் பொருள்களை ஏற்றுமதிப் பொருள்கள் என்றும், பிற இடங்களிலிருந்து நாம் வரவழைத்துக் கொள்ளும் பொருள்களை இறக்குமதிப் பொருள்கள் என்றும் கூறுகிறோம். இவ்விதமாகப் பொருள்களை அனுப்பியும், பெற்றுக் கொள்வதுமான முறைக்கு வாணிகம் என்று பெயர்

ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள் : நம் மாவட்டத்திலிருந்து நிலக்கடலை, அதினின்றும் கிடைக்கும் எண்ணெய், பிண்ணுக்கு, பருத்தி, சர்க்கரை, முந்திரி, தேங்காய், சவுக்கு ஆகியவை இதர மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றன. நிலக்கடலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. எந்திரங்கள், உயர்ந்த வகை ஆடைகள், கண்ணாடிச் சாமான்கள், காகிதம், மண்ணெண்ணெய், மருந்துப் பொருள்கள் முதலியவை இறக்குமதி செய்யப் படுகின்றன. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலைக்குப் பெரிய எந்திரங்கள் இறக்குமதி

யாகின்றன. பண்ருட்டி, நெய்வேலி, விருத்தாசலம், திண்டிவனம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருக்



நெய்வேலி நிலக்கரிக் களத்திலுள்ள மாபெரும் மண்வாரி

கோயிலூர், உளுந்தூர்ப்பேட்டை, வளவனூர் முதலிய ஊர்கள் முக்கிய வியாபாரத் தலங்களாகும்.

பரங்கிப்பேட்டை, கடலூர் ஆகியவை நம் மாவட்டத்தின் துறைமுகப் பட்டினங்கள்.

வினாக்கள்

1. வாணிகம் என்றால் என்ன ?
2. நம் மாவட்டத்திலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் எவை ? இறக்குமதியாகும் பொருள்கள் எவை?
3. நம் மாவட்டத்திலுள்ள முக்கிய வியாபாரத் தலங்கள், துறைமுகங்கள் எவை ?

செய்முறைப் பயிற்சி

1. நம் மாவட்டப் படத்தில் முக்கிய வியாபாரத்தலங்களையும் துறைமுகங்களையும் குறிப்பிடுக.

2. ஒரு மளிகைக் கடைக்குச்சென்று, அங்குள்ள பொருள்களில் எவை உள்ளூர்ப் பொருள்கள் என்றும், எவை மற்ற ஊர்களிலிருந்து வருகின்றனவென்றும் அறிந்து ஒரு பட்டியல் தயார் செய்.

7. மக்கள் தொகையும் பரவியிருத்தலும்

நிலவளம், நீர்வளம் அதிகமாக உள்ள இடங்களில் உணவுப் பொருள்கள் பெருமளவு உற்பத்தி செய்யப்படுவதை நீங்கள் அறிவீர்கள். அவ்விடங்களில் மக்கள் பெருமளவில் குழுமி வாழ்கின்றனர். மேலும், போக்கு வரவு மார்க்கங்கள் கூடும் இடங்கள், துறைமுகங்கள், தொழில் மேம்பாடு அடைந்துள்ள தலங்கள், வாணிகத்தலங்கள், புனிதத் தலங்கள், கல்விக் கூடங்கள் நிறைந்துள்ள தலங்கள், அரசாங்கத் தலை நகரங்கள் ஆகிய இடங்களிலும் மக்கள் அதிகமாக வசிக்கின்றனர்.

இனி, நமது மாவட்டத்தில் மக்கள் அதிகமாகக் குழுமியுள்ள இடங்களையும் குறைந்த அளவில் உள்ள இடங்களையும் பற்றிக் கவனிப்போம். நம் மாவட்டத்தில் சுமார் முப்பது இலட்சத்து நாற்பதாயிரம் மக்கள் வசிக்கின்றனர். கடலூர் நகரம், மாவட்டத் தலைநகராதலாலும் வாணிகத்தலமாக உள்ளதாலும் மக்கள் வசிப்பதற்கு வசதியுள்ள ஊராக இருப்பதாலும் அது அதிக மக்கள் தொகை கொண்டுள்ள நகரமாக விளங்குகிறது. நெய்வேலி, நிலக்கரித் தொழில் நகரமாக அமைந்துள்ளதால் பலவித வேலைவாய்ப்புகள் அங்குக் கிடைக்கின்றன. எனவே, அங்கும் மக்கள் பெருமளவு குழுமியுள்ளனர். விழுப்புரம் ஒரு பெரிய இருப்புப் பாதைச் சந்திப்பு நகரமாகவும் வணிகத் தலமாகவும் உள்ளதால் அங்கும் மக்கள் தொகை அதிகமாக உள்ளது. சிதம்பரம் ஒரு புனிதத்தலமாகவும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அநேக பள்ளிக்கூடங்கள்

ஆகியவை பொருந்திய நகரமாகவும் உள்ளதால் அங்கும் மக்கள் தொகை அதிகமாக உள்ளது. புதுச்சேரி, அந்த இராச்சியத்தின் தலைநகரமாக இருப்பதால் மக்கள் தொகை அதிகம் கொண்ட நகரமாக அது விளங்குகின்றது. அங்கு அநேக தொழிற்சாலைகளும் உள்ளன. இக்காரணத்தினலும் அங்கு மக்கள் குழுமியுள்ளனர். நெல்லிக்குப்பத்தில் சர்க்கரைத் தொழிற்சாலையிருப்பதால் அங்கும் மக்கள் சற்று அதிகமாகக் குழுமியுள்ளனர். விருத்தாசலம், திருக்கோயிலூர், திண்டிவனம், கள்ளக்குறிச்சி போன்ற இடங்களில் சற்று கூடுதலாக மக்கள் வாழ்கின்றனர். தாலூகாத் தலைநகர்களில் கூடுதலாகவும், கிராமங்களிலும் செழிப்பில்லாத வரண்ட பகுதிகளிலும் மக்கள் நெருக்கம் குறைவாக இருப்பதையும் காணலாம்.

வினக்கள்

1. நம் மாவட்டத்தில் மக்கள் தொகை எவ்வெவ்விடங்களில் அதிகமாகவும் எவ்வெவ்விடங்களில் குறைவாகவும் காணப்படுகிறது?
2. நம் மாவட்டத்தில் மக்கள் தொகை அதிகமாக உள்ள இடங்கள் சிலவற்றைக் கூறவும்; அதற்குக் காரணமும் சொல்லவும்.

செய்முறைப் பயிற்சி

உனது ஊரிலுள்ள மக்கள் தொகை, மாவட்டத்திலுள்ள முக்கிய நகரங்களின் மக்கள் தொகை ஆகியவற்றைக் கேட்டுக் குறித்து வைத்துக் கொள்ளவும்.

8. நம் மாவட்டத்தின் முன்னேற்றத் திட்டங்கள்

நம் நாட்டு மக்கள் பெரும்பாலோர் விவசாயிகள். அல்லாமலும் இவர்கள் பெரும்பாலும் கிராமங்களிலேயே வசிப்பவர்கள். கிராமங்கள் ஏற்றம் பெற்றால்தான் நாடு ஏற்றம் பெறமுடியும். இதைக் கருத்தில் கொண்டு, மக்களின் உழைப்பையும் ஊக்கத்தையும் பயன்படுத்தி, நாட்டை ஏற்றம்பெறச் செய்ய, அரசாங்கம் சமுதாய நல அபிவிருத்தித் திட்டம், தேசிய அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றை துவக்கியுள்ளது. இத்திட்டங்களின்படி, அரசாங்கத்தின் ஒத்துழைப்பைப் பயன்படுத்திக்கொண்டு, அந்தந்த இடத்து மக்கள் தங்கள் இடங்களில் விவசாயம், நீர்ப்பாசனம், போக்குவரவு மார்க்கங்கள், கல்வி, சுகாதாரம், மருத்துவ உதவி ஆகியவற்றை அபிவிருத்தி செய்து கொள்ளுகின்றனர். மேலும், அரசாங்கம், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்துள்ளது. 1951-ஆம் ஆண்டில் துவங்கிய முதல் திட்டத்தில் பயிர்த்தொழில் அபிவிருத்தியும், 1956-ஆம் ஆண்டில் துவங்கிய இரண்டாவது திட்டத்தில் கைத்தொழில் அபிவிருத்தியும் முக்கிய குறிக்கோளாகக் கொள்ளப்பட்டன. 1961-ஆம் ஆண்டில் தொடங்கி மூன்றாவது திட்டம் நடைபெற்று வருகிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டப்படி தென் பெண்ணை நதியின் குறுக்கே வட ஆற்காடு மாவட்டத்தில், சாத்தனூர் என்னுமிடத்தில் ஓர் அணை கட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, நமது

மாவட்டத்தில் திருக்கோயிலூர்த் தாலூகாவில் 5800 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது. வீடூர் என்னுமிடத்தில் வராக நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இதனல், சுமார் 3200 ஏக்கர் நிலம் பாசனவசதி பெற்றுள்ளது. இது தவிர, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும் மேற் கொள்ளப்பட்டன. 500-க்கும் மேற்பட்ட ஏரி. குளங்கள் மராமத்துச் செய்யப்பட்டுள்ளன; ஏராள மான கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன; குழாய்க் கிணறுகளும் பம்பு செட்டுகளும் அமைக்கப் பட்டுள்ளன. திருக்கோயிலூர், திண்டிவனம் தாலு காக்களில் புதிய வாய்க்கால்கள் வெட்டப்பட்டுள் ளன. பாசன வசதிப் பெருக்கத்தின் காரணமாக ஓர் இலட்சத்து எண்பத்து நான்காயிரம் ஏக்கர் நிலங்கள் அதிகப் பலனைப் பெறுகின்றன.

நமது மாவட்டத்தில் தொழில் துறையிலும் முன் னேற்றம் ஏற்பட்டுள்ளது. நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்படுகிறது. இதனல் இங்கு ஏராளமான மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்துள்ளது. நெய்வேலியில் அனல் மின்சார நிலையம், சுட்ட நிலக்கரிக் கட்டிகள் உற்பத்தி செய்யும் சாலை, இரசாயன உர உற்பத்திச் சாலை, பீங்கான் பாண்டங்கள் செய்யும் தொழிற்சாலை ஆகியவை ஏற்பட்டுள்ளன. நெல்லிக்குப்பத்தில் சர்க்கரைத் தொழிற்சாலையும் விழுப்புரத்தில் இரயில்வேத் தொழிற்சாலையும் மரக்காணத்திலும், கடலூரிலும் உப்பு உற்பத்தித் தொழிற்சாலையும் உள்ளன.

நம் மாவட்டத்தில் கைத்தொழில்களும், குடிசைத் தொழில்களும் வளர்ந்து வருகின்றன. கைத்தறித் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. மங்கலம்பேட்டை என்னுமிடத்தில் தறிப்பயிற்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது கள்ளக் குறிச்சி, கதர் உற்பத்திக்கு முக்கிய கிராமமாக விளங்குகிறது. விருத்தாசலம், உளுந்தூர்ப்பேட்டை ஆகிய இடங்களில் மண் பாண்டங்கள் செய்யும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சின்னசேலம் என்னுமிடத்தில் தோல் பதனிடும் மாதிரி நிலையம் உள்ளது.

ஐந்தாண்டுத் திட்டங்களின் பயனுக நமது மாவட்டம் சிறந்த அபிவிருத்தி அடைந்துள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளது. மேலும், தொழில் அபிவிருத்தியும் மக்களின் செல்வ நிலையும் ஏற்றம் பெறும் என்பதில் ஐயமில்லை.

வினுக்கள்

1. அரசாங்கம் துவக்கியுள்ள திட்டங்கள் எவை ?
2. நம் மாவட்டம் எங்தெந்த நீர்த்தேக்கங்களால் பாசன வசதி பெற்றுள்ளது ?
3. புதிய வாய்க்கால்கள் எங்தெந்தத் தாலுகாக்களில் வெட்டப்பட்டுள்ளன ?
4. நம் மாவட்டம் தொழிற்றுறையில் எவ்விதம் முன்னேற்றம் அடைந்துள்ளது ?

செய்முறைப் பயிற்சி

1. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நடந்தேறிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து உங்களது வகுப்பில் ஒரு நாடகம் நடித்துக் காட்டு.

2. உனது ஊருக்கு அருகாமையில், அபிவிருத்தித் திட்டத்தினுல் பயன்பெற்ற கிராமத்திற்குச் சென்று, அக் கிராமம் எங்தெந்தத் துறையில் அபிவிருத்தி அடைந்துள்ளது என்று கண்டறியவும்.

நான்காம் வகுப்பு

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

நிலநூல்

1. இருப்பிடமும் இயற்கை அமைப்பும்

நாம் வசிக்கும் மாவட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஆகும். இது தமிழ் நாட்டின் நடுவில் உள்ள ஓர் உள்நாட்டு மாவட்டமாகும். இதன் கிழக்கில் தஞ்சாவூர் மாவட்டமும் மேற்கில் கோயம்புத்தூர் மாவட்டமும் தெற்கில் இராமநாத புரம் மாவட்டமும் வடக்கில் தென் ஆற்காடு, சேலம் மாவட்டங்களும் எல்லைகளாக அமைந் துள்ளன. நம் மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 5,505 சதுரமைல்கள். நம் மாவட்டத்தைப் பத்துத் தாலூகாக்களாகப் பிரித்துள்ளனர். அவையாவன: கரூர், குளித்தலை, முசிறி, பெரம்பலூர், லால்குடி, உடையார்பாளையம், திருச்சிராப்பள்ளி, குளத்தூர், ஆலங்குடி, திருமயம்.

நம் மாவட்டத்தின் மிகப்பெரிய பகுதி சம வெளியே. முசிறித் தாலூகாவின் வடகிழக்குக் கோடி யில் பச்சைமலைக் குன்றுகள் உள்ளன. மேலும், தென் மேற்கில் கடவூர், மருங்காபுரி ஆகிய பகுதிகளிலும் சில குன்றுகள் உள்ளன. குளத்தூர்த் தாலூகாவில் விராலிமலை உள்ளது. நம் மாவட்டத்தில் சுமார் 360 சதுர மைல் காடுகள் இருக்கின்றன.

ஆறுகள்: நம் மாவட்டம் மிகவும் வளம்பெற் றிருப்பதற்குக் காரணம் இங்குப் பாயும் ஆறுகளே யாகும்.

காவிரி: மேற்குத் தொடர்ச்சிமலையில் குடகு நாட்டில் உற்பத்தியாகும் இந்த ஆறு, சேலம் மாவட்டத்திலிருந்து நம் மாவட்டத்திற்குள் நுழைகின்றது. மாவட்டத்தின் நடுவே நேராகக் கிழக்கே பாய்கின்றது. இது திருச்சிராப்பள்ளிக்கு



நம் மாவட்டத்தின் தாலூகாக்களும் தலைநகர்களும்

	தாலூகாக்கள்	தலைநகர்கள்
1.	பெரம்பலூர்	பெரம்பலூர்
2.	உடையார்பாளையம்	ஜெயங்கொண்டசோழபுரம்
3.	லால்குடி	லால்குடி
4.	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி
5.	குளத்தூர்	கீரனூர்
6.	ஆலங்குடி	புதுக்கோட்டை
7.	திருமயம்	திருமயம்
8.	முசிறி	முசிறி
9.	குளித்தலை	குளித்தலை
10.	கரூர்	கரூர்

நேர் மேற்கே 9 மைல் தொலைவில் எலமனூர் என்ற இடத்தில் இரண்டாகப் பிரிகிறது. மேலணை இந்த இடத்தில்தான் கட்டப்பட்டுள்ளது. இரண்டாகப்பிரிந்த காவிரியின் வடகிளை கொள்ளிடம் என்று அழைக்கப்படுகிறது. தென்கிளையின் பெயர் காவிரியே. கொள்ளிடம் லால்குடி, உடையார்பாளையம்



நம் மாவட்ட ஆறுகளும் மலைகளும்

தாலூகாக்களின் தெற்கு எல்லையாக உள்ளது. நம் மாவட்டத்தில் திருச்சிக்குக் கிழக்கே கல்லணை இருக்கின்றது. தென்பிரிவாகிய காவிரி, திருச்சிராப்பள்ளித் தாலூகா வழியே பாய்ந்து, கல்லணையைத் தாண்டி, தஞ்சாவூர் மாவட்டத்திற்குள் நுழைகின்றது.

பிற ஆறுகள்: நம் மாவட்டத்தில் காவிரியுடன் அய்யாறு, அமராவதி, நொய்யலாறு, நந்தியாறு, மருதையாறு ஆகிய முக்கிய ஆறுகள் சேருகின்றன. அய்யாறு, நம் மாவட்டத்திலுள்ள பச்சைமலை, சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை ஆகியவற்றிடையே உற்பத்தியாவதுடன், இரண்டு மலைகளிலிருந்தும் பல துணையாறுகளைப் பெறுகின்றது. இவ்வாற்றில் ஏறக்குறைய ஆண்டு முழுவதும் நீர் ஓடுவதால், இது பாயும் இடங்கள் வளம் பெறுகின்றன. அமராவதி, ஆனைமலையில் உற்பத்தியாகின்றது. பழனி மலையிலிருந்து வரும் பல சிற்றாறுகள் இதனுடன் கலக்கின்றன. நொய்யலாறு கரூர்த் தாலூகாவின் மேற்கு எல்லையில் காவிரியுடன் கலக்கிறது. இந்த ஆறுகள் தவிர, சேலம் மாவட்டத்தில் உற்பத்தியாகும் வடவெள்ளாறு நம் மாவட்டத்திற்கும் தென் ஆற்காடு மாவட்டத்திற்கும் எல்லையாகப் பாய்கின்றது. குளித்தலைத் தாலூகாவின் தென்பகுதில் உற்பத்தியாகும் தென் வெள்ளாறு, புதுக்கோட்டைப் பகுதி வழியே பாய்ந்து, தஞ்சாவூர் மாவட்டத்திற்குள் நுழைகிறது. இவற்றைத்தவிர, ஆங்காங்குப் பல சிற்றாறுகள் நம் மாவட்டத்தில் பாய்கின்றன.

வினாக்கள்

1. நம் மாவட்டத்தின் எல்லைகள் யாவை?
2. நம் மாவட்டத்தில் குன்றுகள் எங்கெங்கு உள்ளன?
3. நம் மாவட்டம் வளம் பெற்றிருப்பதற்குக் காரணமாக உள்ள ஆறுகள் எவை?

செய்முறைப் பயிற்சி

நம் மாவட்டப் படம் வரைந்து, அதில் நம் மாவட்டத்திலுள்ள குன்றுகளையும் பாயும் நதிகளையும் குறிப்பிடு.

2. தட்ப வெப்ப நிலை

நம் மாவட்டத்தின் தட்ப வெப்பநிலை, பொதுவாக வெப்பமாகவும் வரண்டும் இருக்கின்றது. ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரை அதிக வெப்பமாக இருக்கும். ஜூன் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம்வரை தென்கிழக்குப் பருவக்காற்றினால் வெப்பம் சிறிது மட்டுப்படுகிறது. பின்னர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவக்காற்று ஆரம்பமாகிறது. அப்பொழுதிலிருந்து பிப்ரவரி மாதம் வரை குளிர்காலம் நிலவுகிறது. இதன் பிறகு, வெப்பம் மிகுந்துகொண்டு போகின்றது.

தென்மேற்குப் பருவக்காற்றுக் காலத்தில் மழை சிறிதளவாகவும், வடகிழக்குப் பருவக்காற்றுக் காலத்தில் மழை பெருமளவும் பெய்கின்றது. கோடைப்பருவத்தில் மழை இங்குக் குறைவாயிருந்த போதிலும் அப்பொழுது காவிரி உற்பத்தியாகும் இடத்தில் மழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, பயிர்த்தொழிலுக்கு உதவியாக இருக்கின்றது.

நம் மாவட்டத்தில் ஆண்டிற்குச் சராசரி சுமார் 33 அங்குலம் மழை பெய்கின்றது.

வினாக்கள்

1. நம் மாவட்டத்தில் தட்ப வெப்ப நிலை பொதுவாக எவ்வாறுள்ளது ?
2. எந்தெந்த மாதங்களில் நம் மாவட்டத்தில் வெப்பம் அதிகம் ?
3. நம் மாவட்டத்தில் குளிர்காலம் எப்பொழுது ?

4. எந்தெந்தப் பருவக்காற்றுகளினால் நம் மாவட்டத்திற்கு மழை கிடைக்கின்றது? ஆண்டுச் சராசரி மழை அளவு எவ்வளவு?

5. காவிரியில் வெள்ளப் பெருக்கு எப்பொழுது ஏற்படுகிறது?

3. தொழில்கள்

வேளாண்மை: காவிரி, அமராவதி, நொய்யல், நந்தியாறு, அய்யாறு, வெள்ளாறு ஆகியவை நம் மாவட்டத்திற்குப் பாசன வசதியை அளிக்கின்றன. கால்வாய்கள் மூலம் சுமார் $1\frac{1}{2}$ இலட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இவையல்லாமல் 180 பெரிய குளங்களும் 5847 சிறிய குளங்களும் உள்ளன. இவற்றால் சுமார் ஓர் இலட்சம் ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறுகின்றன. குளங்களில் தண்ணீர்த்தட்டு ஏற்படும் பொழுது கிணற்றுப் பாசனம் பயன்படுகிறது. ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் முடிக்கப்பட்ட புள்ளம்பாடி, புதுக் கட்டளைக் கால்வாய்த்திட்டங்களினால் நம் மாவட்டத்தின் பாசன வசதிகள் பெருகியுள்ளன.

நம் மாவட்டத்தின் முக்கியமான பயிர் வகைகள் நெல், சோளம், கம்பு, வரகு, சாமை, கேழ்வரகு, மக்காச்சோளம் முதலியனவாகும். பருப்பு வகைகளில் துவரம் பருப்பு முக்கியமான பயிராகும். எள், நிலக்கடலை, பருத்தி, கரும்பு, புகையிலை ஆகிய பணப்பயிர்களும் விளைகின்றன. ஆற்றுப்பிரதேசங்களில் வாழையும் தென்னையும் பெருமளவில் பயிராகின்றன.

கரூர், உடையார்பாளையம் ஆகிய தாலூகாக்களில் புகையிலை பயிர் செய்யப்படுகிறது. கரூர், குளித்தலை ஆகிய தாலூகாக்களில் சில பகுதிகளிலும், லால்குடியின் சுற்றுப் பகுதிகளிலும் கரும்பு மிகுதியாகப் பயிராகிறது. புகளூரிலும் பேட்டைவாய்த்தலையிலும் காட்டூரிலும் சர்க்கரை ஆலைகள் ஏற்பட்டுள்ளன. மணப்பாறை, பெரம்பலூர் ஆகிய பகுதிகளில் பருத்தி விளைகிறது. உடையார்பாளையம், ஆலங்குடித் தாலூகாக்களில் முந்திரி பயிராகிறது. டால்மியாபுரத்தில் பெரிய சிமெண்டுத் தொழிற்சாலை இருக்கிறது. திருவெறும்பூரில் 'கனரக கொதி மின் கல'த் தொழிற்சாலை இயங்கி வருகிறது. அதற்கருகில் உள்ள சூரியூரில் 'சிறு படைக்கலத் தொழிற்சாலை' உருவாகி வருகிறது.

பொறுக்கு விதைகள் வழங்குவதற்காகத் திருவரங்குளம், திருக்காம்புலியூர், மேக்குடி, புதூர்ப்பாளையம் ஆகிய இடங்களில் விதைப் பண்ணைகளை அரசாங்கம் அமைத்துள்ளது. ஏற்ற எள் விதைகளைத் தயாரிக்கக் கரூருக்கு அருகில் மண்மங்கலத்தில் எள் விதை ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கரும்பு விளைச்சலை அதிகப்படுத்துவதற்காகச் சிறுகமணி என்னுமிடத்தில் ஓர் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வினாக்கள்

1. நம் மாவட்டத்திலுள்ள பாசன வசதிகள் யாவை?
2. நம் மாவட்டத்தில் விளையும் உணவுப் பயிர்கள் எவை? பணப்பயிர்கள் எவை?
3. நம் மாவட்டத்தில் புகையிலை, கரும்பு, பருத்தி ஆகியவை எந்தெந்தத் தாலூகாக்களில் பயிரிடப்பட்டுகின்றன?
4. நம் மாவட்டத்தில் சர்க்கரை ஆலைகள் எங்குள்ளன?

4. கால்நடைகளை வளர்த்தல்

பழங்காலம் முதற்கொண்டே ஆடு, மாடு, கோழி முதலியவற்றை வீட்டுச் செல்வங்களாகவே நாம் கருதி வந்திருக்கிறோம். அவை நாளாவட்டத்தில் நமக்கு நிரம்பப் பயனைத் தருகின்றன.

நம் மாவட்டத்திலுள்ள விலங்குகளின் எண்ணிக்கை, சுமார் பதின்மூன்று இலட்சமாகும். இவ்விலங்குகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதும் தரத்தை உயர்த்துவதும் நமக்கு நன்மை பயப்பதாகும். நம் அரசாங்கம் இதற்குத் தக்க முறையில் ஏற்பாடுகள் செய்துள்ளது. இவ்விலங்குகளின் இனத்தைப் பெருக்குவதற்கும் உயர்த்துவதற்கும் அரசாங்கம், சின்னதாராபுரம், தென்னிலை, கரூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. அல்லாமலும், உயர்ந்தரக விலங்குகளைக் கிராம மக்களுக்குக் கொடுத்து உதவுவதற்கென கரூர், அரியலூர், மழையூர், வெள்ளியணை, கீழப்பழூர், மாயனூர், ஆலங்குடி ஆகிய இடங்களில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விலங்குகளுக்கு நோய் வராமல் தடுப்பதற்கு மருத்துவ நிலையங்களும் நடமாடும் மருத்துவ நிலையங்களும் ஏற்படுத்தியுள்ளனர். புதுக்கோட்டையில் மாட்டுப்பண்ணை ஒன்று உள்ளது. வேப்பந்தட்டை வட்டாரத்தில் ஆடுகள் அபிவிருத்திக்கென ஒரு நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஆடு வளர்ப்போர் சங்கங்கள் நிறுவப்பட்

டுள்ளன. மேச்சேரி ஆடு வளர்ப்பதற்கு இங்கு ஊக்கம் கொடுக்கப்படுகிறது.

ஆடுமாடுகளின் அபிவிருத்திக்கான திட்டங்களைப் போல் கோழி இன அபிவிருத்திக்கும் அரசாங்கம் திட்டம் வகுத்துள்ளது. திருவரங்குளம், வேப்பந்தட்டை, கொட்டப்பட்டு, மச்சுவாடி ஆகிய இடங்களில் கோழி விஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வினாக்கள்

1. நம் மாவட்டத்தில் விலங்குகளின் எண்ணிக்கையையும் தரத்தையும் உயர்த்துவதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்துள்ளது?
2. நம் மாவட்டத்தில் ஆடுகள், கோழிகள் - இவற்றின் அபிவிருத்திக்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

செய்முறைப் பயிற்சி

உனது தோட்டத்தில் ஒரு சிறிய கோழிப் பண்ணை வைக்கவும்.

5. முக்கியக் கைத்தொழில்கள்

பயிர்த்தொழில் நம் மாவட்டத்தில் பெரும்பாலான மக்களால் பின்பற்றப்படுகின்றது. அதற்கு அடுத்தபடியானது நெசவுத் தொழிலேயாகும். குளித்தலை, மணல்மேடு, தாத்தையங்கார்ப்பேட்டை, கரூர், திருச்சிராப்பள்ளி, உறையூர் முதலிய இடங்களில் உயர்ந்த வகை வேட்டிகளும் சேலைகளும் நெய்யப்படுகின்றன. கரூரில் துண்டுகள், பனியன்கள், படுக்கை விரிப்புகள் ஆகியவை பெருமளவில்

நெய்யப்படுகின்றன. கரூர், பெரம்பலூர், துறையூர் முதலிய இடங்களில் பருத்தியைச் சுத்தம் செய்யும் ஆலைகள் உள்ளன.

பெரம்பலூர், முசிறி, கரூர்த் தாலூகாக்களில் முரட்டுக் கம்பளமும், தொட்டியம் வட்டத்தில் குளக்குடி, அப்பநல்லூர் ஆகிய இடங்களில் உயர்ந்தரகக் கம்பளமும் தயாரிக்கப்படுகின்றன.

கோரைப் பாய்கள் முசிறி, குளித்தலை, திருச்சிராப்பள்ளி, லால்குடித் தாலூகாக்களில் தயாரிக்கப்படுகின்றன. புதுக்கோட்டையிலும் முசிறித் தாலூகாவிலுள்ள தொட்டியத்திலும் திருச்சிராப்பள்ளித் தாலூகாவிலுள்ள இலுப்பூரிலும் தீப்பெட்டிகள் செய்வதற்கான தொழிற்சாலைகள் உள்ளன. திருச்சிராப்பள்ளி, உறையூர் ஆகிய இடங்களில் சுருட்டுகளும், சிறுகாம்பூர், லால்குடி ஆகிய இடங்களில் பித்தளைப் பாத்திரங்களும் செய்யப்படுகின்றன.

தொட்டியம் வட்டாரத்தில் மகேந்திரமங்கலத்தில் காகிதம் தயாரிக்கும் தொழிற்கூடமொன்றும், அரியலூர் வட்டாரத்தில் சுண்ணும்பு தயாரிக்கும் தொழிற்பிரிவும் உள்ளன. நாட்டுச் சர்க்கரைத் தொழில் அபிவிருத்திக்காக ஒகலூர், காட்டுப்புத்தூர், பூவாளூர் ஆகிய கிராமங்களில் தொழில் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதைத் தவிர மூங்கில் கூடைகள் — தட்டிகள் தயாரித்தல், கயிறுகள் செய்தல், எண்ணெய் எடுத்தல், தோல் பதனிடுதல், தோல் சாமான்கள் செய்தல், சோப்புச் செய்தல், மண்பாண்டங்கள் செய்தல் ஆகிய தொழில்களும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

வினாக்கள்

1. உயர்ந்த வகை வேட்டிகளும் சேலைகளும் நம் மாவட்டத்தில் எங்கு நெய்யப்படுகின்றன ?
2. நம் மாவட்டத்தில் கம்பளம் எங்குத் தயாரிக்கப்படுகிறது ?
3. காகிதம் தயாரிக்கும் தொழிற்கூடம், சுண்ணும்பு தயாரிக்கும் தொழிற் பிரிவு ஆகியன நம் மாவட்டத்தில் எங்குள்ளன ?
4. நம் மாவட்டத்தில் நாட்டுச் சர்க்கரை அபிவிருத்திக்காகத் தொழில் நிலையங்கள் எங்கு நிறுவப்பட்டுள்ளன ?
5. நம் மாவட்டத்தில் வேறு என்னென்ன சிறு தொழில்கள் நடைபெறுகின்றன ?

செய்முறைப் பயிற்சி

1. பாய், கூடைகள் ஆகியவை தயாரிக்கும் இடங்களுக்குச் சென்று, அவை செய்யும் விதத்தைப் பார்த்தறியவும்.

2. உன் வீட்டில் சிறிய கைத்தொழிலாகச் சோப்புச் செய்வதற்கு ஏற்பாடு செய்.

6. போக்குவரவு

மக்கள், பல்வேறு காரணங்களுக்காக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் பிரயாணம் செய்கின்றார்கள். பொருள்களையும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அனுப்ப வேண்டியிருக்கின்றது. நம் மாவட்டத்தில் பெரும்பாலும் சாலைகளும் இருப்புப் பாதைகளுமே போக்குவரவுக்குப் பயன்படுகின்றன. வெள்ளக் காலங்களில் காவிரியாற்றைக் கடக்கப் பாலங்கள் இல்லாத இடங்களில் பரிசல்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சாலைகள் : நம் மாவட்டத்தில் சுமார் 2,900 மைல் நீளம் சிறந்த சாலைகள் உள்ளன. இவற்றுள் 135 மைல் தூரத்திற்குத் தேசிய நெடுஞ்சாலை உள்ளது. மீதமுள்ளவை மாநில, மாவட்ட நெடுஞ் சாலைகளாகும். சென்னையிலிருந்து கன்னியா குமரிக்குச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை, நம் மாவட்டத்தின் வடகிழக்குப் பகுதியிலிருந்து தென் மேற்குப் பகுதி வழியே செல்கின்றது. மேலும், இங்கிருந்து கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர் ஆகிய இடங்களுக்கும் சாலைகள் செல்கின்றன. திருச்சிராப்பள்ளி, கரூர், குளித்தலை, மணப்பாறை, புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், துறையூர் முதலிய இடங்களில் பல சாலைகள் கூடுகின்றன. இவை எங்கெங்கிருந்து வருகின்றன என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

இருப்புப் பாதைகள் : நம் மாவட்டத்தில் சுமார் 60 மைல் நீளம் அகன்ற இருப்புப் பாதையும் $162\frac{1}{2}$ மைல் நீளம் சற்றுக் குறுகலான இருப்புப் பாதையும் உள்ளன. திருச்சிராப்பள்ளியே பெரிய இருப்புப் பாதைச் சந்திப்பு நிலையமாகும். இங் கிருந்து மேற்காகச் செல்வது மட்டும் அகன்ற பாதை. இது, காவிரியாற்றின் தெற்கே, அதற்குச் சமீப மாகவே குளித்தலை, கரூர் வழியே கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஈரோட்டுக்குச் செல்லுகின்றது. வடகிழக்காகச் செல்லும் பாதை அரியலூர் வழியே, தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள விழுப்புரத் திற்கும், கிழக்காகச் செல்லும் பாதை தஞ்சாவூருக் கும், தெற்காகச் செல்லும்பாதை தனுஷ்கோடிக்கும்,



நம் மாவட்ட இருப்புப் பாதைகளும்—சாலைகளும்

தென் மேற்காகச் செல்லும்பாதை மதுரைக்கும் போகின்றன.

திருச்சிராப்பள்ளியில் ஆகாயவிமான நிலையம் உள்ளது. இதன் வழியே ஆகாயவிமானங்கள் சென்னை, கொழும்பு, திருவனந்தபுரம் முதலிய இடங்களுக்குச் செல்கின்றன.

வினுக்கள்

1. நம் மாவட்டத்தில் சாலைகள் எங்கெங்குச் செல்கின்றன ?
2. திருச்சிராப்பள்ளியிலிருந்து எங்கெங்கு இருப்புப் பாதைகள் செல்கின்றன ?
3. திருச்சிராப்பள்ளி வழியே ஆகாய விமானங்கள் எவ்வூர்களுக்குச் செல்கின்றன ?

செய்முறைப் பயிற்சி

திருச்சிராப்பள்ளி மாவட்டப் படம் ஒன்று வரைந்து, அதில் சாலைகளையும் இருப்புப் பாதைகளையும் குறிப்பிடவும்.

7. வாணிகம்

நமது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் அனைத்தும் நாம் வசிக்கும் ஊரிலேயே செய்யப்படுவதில்லை. அதே போன்று நம் ஊரிலேயே உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் அனைத்தும் நமக்குத் தேவைப்படுவதுமில்லை. அல்லாமலும், அந்தந்த இடத்திற்கேற்றவாறும் வசதிக்கேற்றவாறுமே பொருள்களை உற்பத்தி செய்ய இயலும். அந்தந்த இடத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அந்தந்த இடத்திலுள்ள தேவைகள் போக மீதியுள்ளவற்றை அப்பொருள்கள் தேவைப்

படும் இடங்களுக்கு அனுப்பி வைக்கிறோம். நமக்குத் தேவைப்படும் பொருள்களையும் பிற இடங்களிலிருந்து வரவழைத்துக் கொள்கிறோம். பழங் காலத்தில், ஒரு பொருளைக் கொடுத்து மற்றொரு பொருளை வாங்கிக்கொள்வர். அதற்குப் பண்ட மாற்று என்று பெயர். ஆனால் இப்பொழுது, நாணயத்தின் மூலமாகப் பொருள்களை வாங்கிக் கொள்கிறோம். பொருள்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் வாணிகம் என்று பெயர்.

இனி, நம் மாவட்டத்தின் வாணிகத்தைப் பற்றிக் கவனிப்போம். நமது மாவட்டத்தில் உயர்ந்த வகை வேட்டிகள், சேலைகள், துண்டுகள், பனியன்கள், படுக்கை விரிப்புகள் ஆகியவை பெருமளவில் செய்யப்படுகின்றன. இவை பிற இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இத்தொழில்களில் ஈடுபட்டிருக்கும் ஊர்கள், குளித்தலை, கரூர், துறையூர், தாத்தையங்கார்ப்பேட்டை, திருச்சிராப்பள்ளி முதலியன ஆகும். மணப்பாறை, பெரம்பலூர் ஆகிய பகுதிகளில் உற்பத்தியாகும் உயர்ந்தரகப் பருத்தி விதைகள், செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றன. புகளூர், பேட்டைவாய்த்தலை, காட்டூர் ஆகிய ஊர்களில் சர்க்கரை ஆலைகள் உள்ளன. இங்குத் தயாரிக்கப்படும் சர்க்கரை வெளியூர்களுக்கு அனுப்பப்படுகிறது. திருச்சிராப்பள்ளியில் தயாரிக்கப்படும் சுருட்டுகள் பர்மா, சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. தோல் பொருள்கள், காலணிகள் ஆகியவை திருச்சிராப்பள்ளியிலிருந்து

வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன; சில தானிய வகைகளும் ஏற்றுமதியாகின்றன. டால்மியா புரத்திலிருந்து சிமென்டு அனுப்பப்படுகிறது. உயர்ந்த வகை ஆலைத் துணிகள், எந்திரங்கள், கண்ணாடிப் பொருள்கள், மருந்து வகைகள், காகிதம், வாழ்க்கை வசதிக்கான பொருள்கள், மண்ணெண்ணெய் முதலியவற்றை நாம் இறக்குமதி செய்து கொள்கிறோம்.

வினாக்கள்

1. வாணிகம் என்றால் என்ன ?
2. நம் மாவட்டத்திலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் எவை? இறக்குமதியாகும் பொருள்கள் எவை ?
3. நம் மாவட்டத்தில் எங்கெங்கிருந்து துணி வகைகள், பருத்தி வகைகள், சர்க்கரை, சிமென்டு முதலியன வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன ?

செய்முறைப் பயிற்சி

1. உனது ஊருக்கருகில் உள்ள துணி நெய்யும் இடத்திற்குச் சென்று பார்த்து வரவும்.

2. டால்மியாபுரத்திற்குக் கல்விப் பயணம் சென்று அங்குச் சிமென்டு தயாரிக்கும் முறையைப் பார்த்து வரவும்.

8. மக்கள் தொகையும் மக்கள் பெருக்கமும்

நம் மாவட்டத்தில் சுமார் 31 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். காவிரியாற்றங்கரையிலுள்ள பகுதிகளில் மக்கட் பெருக்கம் சற்று மிகுதியாக உள்ளது. அல்லாமலும், தொழில் அபிவிருத்தி அடைந்துள்ள இடங்களிலும் தொழிற்சாலையுள்ள இடங்களிலும் கைத்தொழில்கள் மிகுதியாக உள்ள இடங்களிலும்

அலுவலகங்கள், கல்விக் கூடங்கள் ஆகியன உள்ள இடங்களிலும் வியாபாரத் தலங்களிலும் மக்கள் தொகை மிகுதியாக உள்ளது. மற்ற இடங்களில் குறைவாக உள்ளது,

திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பொன்மலை, டால்மியாபுரம், புகளூர், பேட்டைவாய்த்தலை, அரியமங்கலம் முதலிய இடங்களில் தொழிற்சாலைகளும், தொழில் அபிவிருத்தியும் உள்ளதால் மக்கள் தொகை அதிகமாக உள்ளது. கரூர், மணப்பாரை, அரியலூர், குளித்தலை, பெரம்பலூர், உடையார் பாளையம், துறையூர், லால்குடி முதலிய இடங்களிலும், கைத்தொழில், வியாபாரம் இவற்றால் மக்கள் தொகை, பெரும் நகரங்களுக்கு அடுத்தாற் போன்றுள்ளது. மற்ற இடங்களில் மக்கள் தொகை, அவ்வூர்களிலுள்ள இயற்கை வசதிகளைப் பொறுத்து அமைந்துள்ளது. திருச்சிராப்பள்ளியில் இரயில்வே அலுவலகங்கள், கல்விக் கூடங்கள், கைத்தொழில் நிலையங்கள் ஆகியவை உள்ளதால் மக்கள் அங்கு அதிகமாகக் குழுமியுள்ளனர். திருவரங்கம் புண்ணியத் தலமாக இருப்பதால் அங்கும் மக்கள் நெருக்கம் அதிகமாக உள்ளது.

வினாக்கள்

1. மக்கள் தொகை பொதுவாக எங்கு அதிகமாகவும், எங்குக் குறைவாகவும் அமையும்?
2. நம் மாவட்டத்தில் அதிக மக்கள் நெருக்கம் உள்ள இடங்களைக் குறிப்பிடு.

செய்முறைப் பயிற்சி

உங்கள் பள்ளியின் சார்பில் உங்கள் ஊரிலுள்ள மக்கள் தொகையையும், அவர்கள் ஈடுபட்டுள்ள தொழில்களையும் கணக்கெடுக்கவும்.

9. மாவட்டத்தின் பொருளாதார, சமூக நல முன்னேற்றங்கள்.

நம் நாட்டில் பல்வேறு வகை வசதிகள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு நாடு ஏற்றம் பெறவில்லை. எனவே, மக்களின் உழைப்பு, ஒத்துழைப்பு முதலியவற்றைப் பயன்படுத்திக்கொண்டு, அரசாங்கத்தின் உதவியையும் பெற்று, மக்களின் வாழ்க்கைத்தரம், வாழ்க்கை வசதிகள் ஆகியவற்றை உயர்த்துவதற்காக, சமுதாய நலத்திட்டங்கள், தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள் ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, மூன்ருவது திட்டம் நடைபெற்று வருகின்றது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பயிர்த்தொழிலின் ஏற்றமும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தொழிலின் ஏற்றமும் குறிக்கோள்களாக இருந்தன. மூன்ருவது ஐந்தாண்டுத்திட்டத்தில் வேளாண்மை, பாசனம், மின் சக்தி, சிறு தொழில்கள், கல்வி, சுகாதாரம், சாலைகள், சமுதாய நல அபிவிருத்தி முதலியவை இடம்பெற வழி வகுக்கப்பட்டுள்ளது.

நம் மாவட்டத்தில், திட்டக் காலங்களில் மிகுதியாக அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. பாசன வசதிக்காகப் புதிய கட்டளை உயர் மட்டக் கால்வாய், புள்ளம்பாடிக் கால்வாய், முள்ளிப்பாடிக் கால்வாய் ஆகியவை வெட்டப்பட்டுள்ளன. முசிறிக் கால்வாய், முதலியார் கால்வாய், உய்யக்கொண்டான் விஸ்தரிப்புக்கால்வாய் முதலியனவும் நிறைவேற்றப்

பட்டுள்ளன. லால்குடி தாலூகாவில், உப்பாறுக்குக் குறுக்கேயும் ஆலங்குடி தாலூகாவில் இரு சிறு அணைகளும் கட்டப்பட்டுள்ளன. குளத்துப் பாசனத் திட்டங்களும், சிறு பாசனத் திட்ட வேலைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. பழுதேற்பட்ட நீர் நிலைகள் செப்பனிடப்பட்டுள்ளன.

உற்பத்தி உயர்ந்தால்தான் நாட்டின் பொருளாதார நிலை உயரும்; மக்களின் வாழ்க்கைத் தரமும் உயரும். விவசாயிகளுக்குப் பொறுக்கு விதைகளை வழங்குவதற்காக, அரசாங்கம் நம் மாவட்டத்தில் நான்கு இடங்களில் விதைப் பண்ணைகளை அமைத்துள்ளது. பயிர்களுக்கு நோய் நொடிகள் வராமல் தடுப்பதற்காகப் பூச்சிகொல்லி மருந்துகளைப் பாதி விலைக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. பயிர்ப் பாதுகாப்பு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உற்பத்திப் பெருக்கத்தில் புதிய இயந்திரங்கள் பயன்படுமாறு அவற்றைப் பாதி விலைக்கு விவசாயிகளுக்கு வழங்குகின்றனர். மேலும் அவர்களுக்கு உரங்கள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாடுகளின் எண்ணிக்கையையும் தரத்தையும் உயர்த்துவதற்கு அரசாங்கம் சின்னதாராபுரத்திலும், தென்னிலையிலும் நிலையங்கள் ஏற்படுத்தியுள்ளது.

சிறு தொழில், கிராமக் குடிசைத் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. திருச்சிக்கு அருகில் உள்ள அரியமங்கலத்தில் ஒரு தொழில் பேட்டை அமைக்கப்பட்டிருக்கிறது. தோல் பதனிடுதல், பாய்பின்னுதல் ஆகிய

தொழில்களை அபிவிருத்தி செய்வதற்குத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. கைத்தறித்தொழில் அபிவிருத்திக்காகப் புதிய கருவிகள் இலவசமாகவும் கடனாகவும் பெறுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மருதையாற்றின் குறுக்கேயும், திருச்சி—சிதம்பரம், கோயில்பட்டி — திருமானூர், புள்ளம்பாடி — சீர்காளப்பூர் ஆகிய சாலைகளிலும் பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. வேறு சிறு சிறு பாலங்களும் கட்டப்பட்டுள்ளன. நம் மாவட்டத்திலுள்ள முக்கியமான எல்லாக் கிராமங்களுக்கும் சாலை வசதி உள்ளது.

அரசாங்க மருத்துவ மனைகள், கிராமப்புற மருத்துவ மனைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இரண்டு இடங்களில் தொழு நோய் சிகிச்சை நிலையங்கள் பணியாற்றி வருகின்றன.

நம் மாவட்டத்தில் இரண்டாவது திட்டக் கால முடிவில், 124 உயர்நிலைப் பள்ளிகளும், 2,796 ஆரம்பப் பள்ளிகளும் இருந்தன. மூன்றாவது திட்டக்காலத்தில் அவற்றின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

வினாக்கள்

1. *ஐந்தாண்டுத் திட்டங்களின் குறிக்கோள்கள் யாவை ?*
2. *நம் மாவட்டத்தில் திட்டக் காலங்களில் ஏற்பட்டுள்ள பாசன வசதிகள் யாவை ?*
3. *நம் மாவட்டத்தில் உற்பத்தி உயர்வுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திட்டங்கள் எவை ?*

4. சிறு தொழில்கள் அபிவிருத்திக்காக நம் மாவட்டத்தில் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன ?

5. சமூக நலன்களுக்காக நம் மாவட்டத்தில் செய்யப்பட்டுள்ள காரியங்கள் யாவை ?

செய்முறைப்பயிற்சி

உன் ஊரில் திட்டக்காலத்தில் என்னென்ன அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளனவென்று ஆசிரியரைக் கேட்டறியவும்.

86753

TB
031(6)
N65